# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆடி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 25-ம் இலக்கம்


# வெளியேறு!
# அல்லது வெளியேற்றுவோம்!


வண. சி. ம. விசுவாசம் சுவாமிகள்,
கத்தோலிக்கசேவை ஆசிரியர்.


நமது அண்டைஇராச்சியமாகிய கேரளத்திலே மிகப்பெரிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பொய்புரட்டுக்களாலும், பித்தலாட்டங்களாலும், பலாத்காரத்தாலும் பொதுமக்களின் பணத்தைக் கொண்டுதானேபொதுமக்களின் சுதந்திரவாழ்க்கையை நசித்துவரும் நாஸ்திகக் கம்யூனிஸ்த அரசாங்கத்தை வெளியேற்றுவதற்காகஆத்திகரின் அணிவகுப்பு-அறவீரர்களின் புனிதபோராட்டம் சாத்வீகமுறையிலே—பிரமாண்டமான அளவிலே வளர்ந்துவருகிறது.

"நாங்கள் பெற்றுவளர்த்த செல்வக்குழந்தைகளுக்கு எங்கள் மனதிற்கும், மதத்திற்கும் பிடித்த முறையிலே சுதந்திரக்கல்வியும், சன்மார்க்க ஒழுக்கங்களும் கற்பிப்பது எங்களது பிறப்புஉரிமை. எங்கள்வரிப்பணத்தை வாங்கி வயிறுவளர்க்கும் அரசாங்கம் எங்கள் இந்தஉரிமையை மதித்து, சுதந்திரத்தைப் பாதுகாத்து, பொதுப்பணத்திலிருந்து சமூகநீதிப்படி மானியத்தை விநியோகிப்பது அரசாங்கத்தின் கண்டிப்பானகடமை. இக்கடமையைச்செய்யத்தவறினல்—இந்தஉரிமையைப் பறிக்கமுயன்ருல் அரசாங்கத்தைவிரட்டி வெளியேற்றுவோம்!" என்று அறைகூவி நல்லறம்காத்து, நாஸ்திகத்தைக்கவிழ்க்க வீரமுடன் போராடி நிற்கின்றனர், நாலாமதங்களையும்சேர்ந்த கேரள மக்கள்.

கேரளமக்களின் இந்தச்சுதந்திர கல்விப்போராட்டம், கேரளாவின் பரந்தபொதுவாழ்க்கையில் ஒருதனி அம்சமே. ஆனி 12-ம்நாள் கேரளாமுழுவதிலும் கொண்டாடப்பெற்ற "விடுதலைத்தின"மன்று, ஆயிரம்ஆயிரம் கிராமங்களிலும், எல்லாநகரங்களிலும் நடைபெற்ற சரித்திரங்கண்டிராத பிரமாண்டமான ஊர்வலங்களிலே — சனசமுத்திரம்போன்ற பொதுக்கூட்டங்களிலே கம்யூனிஸ்தஅரசாங்கம் கடந்தஇருஆண்டுகளிலும் செய்த அட்டூழியங்களைப் பட்டியலாகத் திரட்டி, ஒரு "குற்றப்பத்திரிகை" வாசித்தார்கள். 37ஷரத்துக்கள் கொண்ட நீண்ட குற்றப்பத்திரிகை அது.

கடந்தஇருஆண்டுகளாகக் கேரளாவிலே கம்யூனிஸ்தஆட்சியில் மக்கள் மிகத்தீவிரமாகச் சுபிட்ச பாதையிலே முன்னேற்றம் அடைந்தார்கள்என்று கேரளகம்யூனிஸ்தஅரசாங்கமும், கம்யூனிஸ்தகட்சியும், அவர்களின் உடன்பிறந்த ஏனைய இந்திய இராச்சியங்களின் கம்யூனிஸ்த கட்சிகளும் பறைசாற்றிவந்தன.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு. இப்பொழுது உண்மை வெளிவருகிறது. கேரளமக்கள் அனைவரும் சாதி மத பேதமின்றி ஒருவாய்ப்பட உலகிற்குப் பறைசாற்றுகின்றனர். நடந்தநிஷ்டூரங்களை இதோ படித்துப்பாருங்கள். இப்படிப்பட்ட அரசாங்கம் பதவியில்இருப்பதைக் கேரளமக்கள் பொறுத்துக்கொண்டு இருக்க முடியுமா?

1. கேரளநாட்டில் 2-வது ஐந்தாண்டுத்திட்டத்தில் நிறைவேற்றவேண்டியிருந்த அபிவிருத்தித்திட்டங்களைக் கம்யூனிஸ்த அரசாங்கம் புறக்கணித்துவிட்டது. இத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டபணம் காலாவதியாகும்படி இடம்அளித்தது.

2. கேரள கம்யூனிஸ்த அரசாங்கம் தன்வசமுள்ள அதிகாரங்கள் அத்தனையையும் தனதுகட்சியின் நலனுக்காகவே துஷ்பிரயோகம் செய்திருக்கிறது. கம்யூனிஸ்தகட்சியைச்சேர்ந்தவர்கள் எதையும் பிரியம்போல்செய்யலாம். அக்கட்சியில் சேராதவர்களுக்கு எந்தவிதமானஉரிமையும் இல்லையென்று ஆகிவிட்டது.

3. கம்யூனிஸ்தர்கள்நிறைந்த கூட்டுறவுக்கழகங்களுக்குஎவ்வித கொள்கையோ, முறையோஇல்லாமல், அரசாங்க திறைசேரியிலிருந்து (பொதுப்பணத்திலிருந்து) பணம் அள்ளிக்கொடுக்கப்படுகிறது. "தொழிலாளர் ஒப்பந்தகழகங்கள்" கம்யூனிஸ்த ஈழவர்கள்நிறைந்த கள்தொழிலாளர் சங்கங்கள் கடந்தஇரு ஆண்டுகளில் எத்தனைஆயிரமாகப்பெருகியிருக்கின்றன என்பதைப்பார்த்தால், பொதுப்பணம்


(தொடர்ச்சி 4-ம் பக்கம்)


# அன்று லூர்துபதியிலே அவள் குணமடைந்த வரலாறு

லூர்துபதியிலே சமீபத்தில் அற்புதமாகக் குணமடைந்து பத்துவருடங்களுக்குப்பின் முதன்முறையாக எழுந்துநடந்த செல்வி சிமொன் ருன்ஸ்ற்எனும் 23வயதுள்ளபெண்மணி பெல்ஜியத்திலே லியேர்எனும் சிறியபட்டினத்தில் வசிக்கின்ற சிசுக்கள் பரிபாலன சாலைஒன்றின் சொந்தக்காரர்ஒருவரின் புதல்வியாவள். இவள் கடந்தபத்துவருடங்களாகக்கடுமையானநோய்கண்டு வருந்தினுள். அதிலும் கடந்த எட்டுவருடங்களாக முற்ருகவே நடக்கமுடியாதவளாய் இருந்தாள். அன்றுலூர்துபதியிலே திடீரெனக்குணமடைந்த இவள் இன்று நல்லசுகத்தோடிருக்கின்ருள். பிறருதவியில்லாது உலாவி வருகின்ருள். சமீபத்திலேஇவள் பெல்ஜிய தேசியதிருயாத்திரையில்சேர்ந்து லூர்துபதிசென்றிருந்தாள்.

பெல்ஜியபத்திரிகைஒன்றின் ஆசிரியர் ஒருவரிடம் இவள்கூறியதுவருமாறு: "இற்றைக்குப் பன்னிருவருடங்களின்முன் எனதுஇடதுதொடைஎலும்பிலே ஓர்பெரும்விரணக்கட்டி தோன்றி வளர்ந்துகொண்டு வரலாயிற்று. என்ருலும் இருவருடங்களாக ஒருவாறு இழுத்திழுத்துநடந்து பாடசாலைக்கும், கோவிலுக்கும் போகக்கூடியவளாயிருந்தேன். பிற்பாடுபடுக்கையிலேயே கிடக்க வேண்டியவளானேன். பின்னர் எனதுஉடலின் மறுபகுதிகளிலும் வேறும்விரணக்கட்டிகளும் உண்டாய் வளர்ந்து, கடைசியாக எனதுஇடதுகால் பாரிசவாதம் கண்டு முற்ருகவழங்கமுடியாமல் போய்விட்டது. நான் அன்ற்வேர்ப்நகரிலே சத்திரசிகிச்சை செய்யப்பட்டேன். பிற்பாடு லொசேன், மூனிச்நகர்களிலும், [illegible], லூவெயின் சர்வகலாசாலைகளிலும்உள்ள தலைசிறந்த டக்றர்மாராலே வைத்தியமுறையாகப் பரிசோதிக்கப்பெற்றுச் சிகிச்சைசெய்யப்பட்டேன். ஆனல்,யாவும் விழலாயின. யாதாமோர்குணமும் ஏற்படவில்லை."

1951-ம்ஆண்டுமுதல் இந்த இளமாது வருடந்தோறும் லூர்துதிருப்பதிக்குநடந்தேறும் பெல்ஜிய் தேசியதிருயாத்திரையில் சேர்ந்துகொண்டாள். இவ்வருடம் அந்தயாத்திரையின் போது அத்திருசேத்திர அற்புதசலத்தில் ஆரும்முறையாக நீராடியபோது உடனடியாகவே முற்றிலும்குணமடையலானுள். எவ்வாறு இது நேர்ந்தது? அவள் தானேசொல்லுகின்ருள்."அன்று காலைநான் மிகஅதிகமாக வேதனைப்பட்டு, அத்துணை பலவீனமுள்ளவளாய் இருந்தமை


(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26-ம் நம்பர் அறை

எஸ். ஏ. எம்.

சிக்காகோநகர ஆஸ்பத்திரிஒன்றிலே அன்றுகாலை மேர்பிஎன்றநேர்ஸ் நோயாளருக்கு எடுத்துச்செல்லவேண்டிய உணவுத்தட்டுகளைக் கைவண்டிஒன்றில் அடுக்கிக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஆஸ்பத்திரியில் கடமைபார்க்கும் ஒருகன்னியாஸ்திரி அப்பக்கம்வந்தார்.

"மேர்பி! சென்றஇரவு ஏதாவது விசேஷம் உண்டா? நோயாளிகள் பாடு எப்படியிருக்கிறது?" என்று அந்தக்கன்னியாஸ்திரி நேர்ஸிடம் விசாரித்தார்.

"சிஸ்றர்! 26-ம் நம்பர் அறையிலே ஒருமனிதன் சாகுந்தறுவாயில் இருக்கின்றான். இது உங்களுக்குத் தெரியுமென நினைக்கிறேன்."

"எனக்குத்தெரியாது சென்றதிங்கள்முதல் சத்திரவைத்திய அலுவல்களையே நான் கவனித்துவருகிறேன். இன்றுதான் இங்குவந்தேன். அவனுக்கு என்னவியாதி? மரிக்கிறவர்களுக்காகச் சொல்லும் செபத்தை வாசிக்க அவன்அருகில் கன்னியாஸ்திரிமார் எவரும்இல்லையா?"

"இல்லை சிஸ்றர், அந்த மனிதன் நேற்றுக்காலை ஆஸ்பத்திரிக்கு வந்தது முதல் தனதுஅறையில் குருவானவரோ, கன்னியாஸ்திரிமாரோ கால்வைக்கப்படாதென்று கண்டிப்பாக எச்சரித்துக்கொண்டிருந்தான்; அவனமனைவியும், இரு நேர்ஸ்மாரும்தான் அவன் அருகில் நிற்கிறார்கள்; மனைவி பக்தியுள்ள ஒர்கத்தோலிக்க பெண்ணாகக் காணப்படுகிறாள். அவன் நேற்று மத்தியானம் ஒருமணிக்கு அறிவிழந்தான். அக்ஷணமே அவள் தனது பங்குச்சுவாமியாருக்கு அறிவித்தாள். அவர்வந்து மூன்றுமணிநேரம் அவன் அருகில் காத்திருந்தார். பலனில்லை. திரும்பிப் போய்விட்டார்."

கன்னியாஸ்திரி உடனே தானே நோயாளியைப் பார்க்கப்போனார். அவன்அருகில் அவனுடைய மனைவி அமர்ந்திருந்தாள். நோயாளியைக் கவனித்ததும் மரணம் அதிகம் தூரத்தில் இல்லையென அறிந்துகொண்டார்.

"சிஸ்றர்! டக்றர் ஜோன்ஸ் இப்பொழுதுதான் போனார்; அந்தியவேளை அண்மிவிட்டது; கடுமையான நியூமோனியாச்சுரம்; நேற்றுப்பகல் ஒருமணிமுதல் நோயாளி அறிவிழந்திருக்கிறான்" என்று ஒருநேர்ஸ் பகர்ந்தாள்.

கன்னியாஸ்திரி நோயாளியின் மனைவிபக்கம திரும்பினார். அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு அவளுடன் அன்பாகப் பேசினார். அப்போது அவள் கூறுவாள்:

"சிஸ்றர்! என்கணவர் நல்லமனிதர்; ஆனால், கண்டகண்ட புத்தகங்களையெல்லாம் வாசித்து வேதவிரோதிகளுடன் சகவாசஞ்செய்து எங்கள்வேதத்தைத் துவேஷிக்கத்தொடங்கி வேதவிரோதியானார்; இன்று அவர் எந்த மதத்தையும் அனுசரியாதபோதிலும் நாங்கள்வேதகடமைகளை அனுசரிப்பதற்குத் தடைசெய்தவர் அல்ல; அவர் மனந்திரும்புமபடியாய் நான் முப்பது வருடங்களாக முதல்வெள்ளிக்கிழமைதோறும் திவ்வியநற்கருணை உட்கொண்டு வந்திருக்கிறேன்; ஆனால், முடிவு இப்படியாகுமென்று நான் நினைத்திருக்கவில்லை; இப்போதுஅவர் மனந்திரும்பாமலே சாகப்போகிறார் போல் இருக்கிறதே" என்று அழுது பெருமூச்செறிந்து மனைவி கூறினாள்.

அவளுக்குச் சில ஆறுதலான வார்த்தைகள் சொல்லிவிட்டு, அந்த நல்ல கன்னியாஸ்திரி நோயாளியின் பக்கம் திரும்பினார். கையைப் பிடித்துப் பார்த்தார் அவனுக்கு உலக வாழ்க்கை இன்னும் சிலமணி நேரந்தான்; இனிமேல் அவனுக்கு ஒன்றுமே செய்ய இயலாது என்றார். அவனை வளர்த்தியிருந்த படுக்கை வியர்வையினால் நனைந்துபோயிருந்தது.

"அவன் சாகிறது நிச்சயம்; ஆனால், ஓர்நல்ல உலர்ந்த படுக்கையிலாவது சாகட்டும்" என்று கன்னியாஸ்திரி சொல்லிப் புதுத்துணி கொண்டுவரச்செய்து, நோயாளியை வேறுபடுக்கையில் வளர்த்துமாறு தானே அவனைத் தூக்கினார். அவருடையகைகள் பட்டதும் நோயாளி திடீரெனத் தனது கண்களைத் திறந்தான். தன்னைச் சுற்றுமுற்றும் பார்த்தான். தான் இருப்பது எங்கேயென்று கண்டறிய அங்கலாய்ப்பவனைப்போல் காணப்பட்டான். திடீரென அவனது பார்வையில் ஓர்மாற்றம் காணப்பட்டது. அவன் மனதிலும் ஓர்திருப்பம் ஏற்பட்டது போல தோன்றியது. பக்கத்தில் நிற்பவர்கள் யாரென அறிந்துகொண்டான்.

மனைவியை விழித்து, "மேரி, குருவானவருக்கு ஆள் அனுப்பு" என்று அமைதியாகக் கூறினன். இதைக் கேட்டதே அவள் மலைத்துப்போய், "என்ன, குருவானவரிடமா?" என்றாள். "ஆம"என்று தலையை அசைத்தான அவன். ஆச்சரியம் அணைகடந்து போகவே அவளால் பேசமுடியவில்லை. அதற்கிடையில் ஓர்நேர்ஸ் ஓடோடியும் சென்று குருவானவரை அழைத்துவந்தாள். நோயாளி அவரை நோக்கி, தான் அதுவரை நடந்துகொண்ட விபரீத நடத்தைகளுக்காக விதனப்படுவதாகவும், தான பாவசங்கீர்த்தனஞ் செய்ய ஆசிப்பதாகவும் கலங்கியகண்களுடன் இருகரங்கூப்பி அவரைஇரந்து கொண்டான். குருவானவரும் ஆச்சரியவசத்தராய், அவனிடம் சிலகேள்விகள்கேட்டுத் தகுந்தபதில்கள் பெற்றுக்கொண்டார். பின்னர் அவனிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டுத் திவ்விய நற்கருணைவழங்கினார். அதிலிருந்து அவன்முகத்தில் சாந்திநிலவத்தொடங்கியது. அமைதியாகப் படுத்திருந்தான்.

மாலை 6 மணிக்கு அவன் மனைவியைப்பார்த்து, "மேரி, இனி நெடுநேரம் நான் உயிர் பிழைத்திருக்கமாட்டேன்; நான் மனந்திரும்பி மறுபடியும் ஓர்கத்தோலிக்க கிறீஸ்தவனாகச் சாகிறேனென்று என்னைக் கெடுத்த வேதவிரோதிகளான என் தோழர்களுக்குத் தெரிவித்துவிடு; உன்னால் நான்உய்ந்தேன்; உனது மன்றாட்டால் நான் மனந்திரும்பினேன்; உனக்கு என் மனப்பூர்வமான நன்றி" என்று இருவிழிகளிலிருந்தும் கண்ணீர் பெருகத் தாழ்ந்தகுரலில் மொழிந்தான்.

சற்று வேளைக்குப்பின் ஓர் கன்னியாஸ்திரி நோயாளியண்டை முழந்தாளிட்டு மரிக்கிறவர்களுக்காகச் சொல்லப்படும் செபங்களைத் தொடக்கினார். மேரி தன் தணவனின் கரங்களைப் பற்றியபடியே அவன்மேல் தேவஇரக்கத்தை அழுதுவேண்டிக்கொண்டிருக்கையில் அவனுடைய ஆத்துமம் உடலைவிட்டுப் பிரிந்தது.

கணவனை இழந்த மேரிக்கு முன்சொன்ன கன்னியாஸ்திரி ஆறுதல்கூறினார். "சிஸ்றர்! நான் யேசுவின் திரு இருதயத்தில் நம்பிக்கைவைத்தேன்; எனது நம்பிக்கை வீண்போகவில்லை" என்று மேரி அழுதுகொண்டே கூறினாள்.

---

● இந்தியதேயிலை அதிகம் விரைவிலே ஜெற்விமானங்கள்மூலம் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது. கப்பல்மூலம் ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் பத்துமுதல் பதினறுவார தாமதத்தை இதனால் தவிர்த்துவிடலாம். அஸாம்தேயிலைத் தோட்டங்களில் பறிக்கப்படும் தேயிலையை ஜெற்விமானங்கள்மூலம் ஏற்றுமதி செய்வதால் அது அங்கிருந்து பத்துத் தினங்களுள் இங்கிலாந்தில் பாவனைக்குக் கிடைக்கும்.

தலைமன்னார்த் தபால்

# புனித ஞானப்பிரகாசியார் திருநாள்

இளைஞரின் பாதுகாவலராம் புனித ஞானப்பிரகாசியார் திருநாள் சென்ற 21-6-59 ஞாயிற்றுக்கிழமை அர்ச். புனித லோறஞ்சியார் ஆலயத்தில் இளைஞர் சங்கத்தின் சார்பாக வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. இதனைச் சிறப்பாகக் கொண்டாடிய பெருமை எமதுபங்கின் தற்காலிக கட்டளைக்குரவர் அதி வண. எஸ். இம்மானுவேல் சுவாமி அவர்கட்கே உரியதாகும்.

அன்று பிற்பகல் மூன்றுமணியளவில் மன்னார்மேற்குக் கிராமச்சங்க தலைவர் திரு. ரி. எலியாஸ் பீரிஸ் அவர்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகச் சமீபத்தில் அமைக்கப்பெற்ற நூல்நிலையம் ஒன்றையும், அதன் அருகாமையில் பொழுதுபோக்குக்காக அமைக்கப்பெற்ற விளையாட்டுமைதானம் ஒன்றையும் திறந்துவைத்தார்.

பின்னர் சஞ். சூசையப்பர் பாடசாலை மணடபத்தில நடைபெற்ற ஓர் பெரும் பொதுக்கூட்டத்திற்குத் திரு. ரி. எலியாஸ் பீரிஸ்அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில: இந்நாடு பல வழிகளிலும் முன்னேற்ற மடைவதற்கு இளைஞர் சேவையே அவசியமென்றும், அவர்களுடன் ஊர்ப்பொதுமக்கள் யாபேரும ஒத்துழைக்குமபடியும் வேண்டி நின்றார்.

அதன்மேல் அதிவண. இம்மனுவேல் சுவாமியவர்கள் பேசுகையில், அன்று இளைஞர்கள் புனிதஞானப்பிரகாசியார் திருநாளை அத்துணைசிறப்பாகக் கொண்டாடியதற்காக நன்றிதெரிவித்து நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர்கள் அயராது உழைக்கவேண்டுமெனக் கூறிநின்றார். அதன்பின் பேசிய ஆசிரியர்கள் ஜே எஸ். அழகையா, எம். அந்தோனிப்பிள்ளை எனபவர்கள் இந்நாட்டின் முன்னேற்றத்திற்காக எப்படி உழைக்கவேண்டுமென்பதை எடுத்துக்காட்டியும், அரசாங்கம் பாடசாலைகளை ஏற்றுநடப்பிக்க எத்தனித் திருப்பதைக் கண்டித்தும் பேசினார்கள்.

ஈற்றில் இளைஞர் சங்கத்தின் சார்பாக அதன்தலைவர் நன்றியுரைகூறி நிற்கக் கூட்டம் அமைதியாக முடிவடைந்தது. பின்னர் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டுத் திருநாள் இனிது முடிவெய்தியது.

— கூஞ்ஞு.

—(~)—

# புத்தளத்தில் மகா ஞான ஒடுக்கம்

இவ்வருடம் புத்தளத்துக்கு ஒரு அருட்பிரசாத வருடமாகும். எமது கட்டளைக்குரவர் வண. எல். ஜே. அகஸ்ரீன்சுவாமியவர்கள் கடந்தஆறுமாதங்களிலும, மூன்றுபாஷைகளிலும் மூன்றுஞானஒடுக்கங்கள் நடத்தியிருக்கின்றார். கடைசியாகத் தமிழ்பேசும் மக்களுக்கெனச் சென்றஆனி 7-ந்திகதி முதல் 20-நதிகதிவரை ஒருமகாஞான ஒடுக்கம் நடாத்தப்பட்டது. இதுமுன்னொருபோதும் நடைபெறுதமுறையிலே பெரும்பத்தியருட்சியுடன் தொடங்கியது. 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் 6மணியளவில் அர்ச். மரியநாயகியின் ஆலயமைதானத்தில் மக்கள்அனைவரும குழுமியிருக்க, சுவாமியவர்கள் ஊதாவாணப்போர்வைஅணிந்து, பாடுபட்டசுரூபத்தைத் தமதுகரங்களில் ஏந்திக்கொண்டு அவர்களுக்குமுன்பாகக் காட்சியளிக்க, ஞானஒடுக்க போதகர்களாகவந்த வண. சற். என். குரூஸ்சுவாமியவர்களும், வண. என். யோசெவ் சுவாமியவர்களும் முழந்தாளிட்டுத் தங்கள்பாவங்களுக்காக மன்னிப்புக்கேட்டுப் பாவசங்கீர்த்தன மந்திரத்தை உரத்தசத்தமாய் மிகுந்தபத்தியுடன் சொன்னார்கள். பின்னர் கட்டளைக்குரவர்கேட்ட கேள்விகளுக்கெல்லாம் போதகர்கள் இருவரும் விடையிறுத்ததும் குருமாரும், ஏனையோரும் ஆலயத்துள் பிரவேசித்தார்கள். அங்கேமக்கள்அனைவரும் பாவசங்கீர்த்தனமந்திரம் சொல்லிமுடிந்ததும்,

வண. குரூஸ்சுவாமியவர்கள் "இதோ! இப்பொழுதே வாய்ப்பான நேரம்; இதோ! இரட்சணியத்தின் காலம்; அச்சநடுக்கத்தோடு இரட்சணியவேலையைக் கவனியுங்கள்" என்று தமதுபிரசங்கத்தைத் தொடங்கினார். பாடசாலைப்பிள்ளைகளுக்குப் 10-ந்திகதி முதல் 13-ந்திகதிவரை ஞானஒடுக்கம் போதிக்கப்பட்டது. இந்தஞானஒடுக்க முடிவுதினமன்று ஆலயத்தில் பகல் முழுதும் பிள்ளைகளின் பாமாலை, செபமாலைகொண்டு தேவதாய்க்குப் பூமாலைகள் சூட்டப்பட்டன. அன்றுசாயந்தரம் 6மணிக்குச் சிறுவர்கள் தேவபாலனையும், சிறுமிகள் தேவதாயையும் பவனியாக எடுத்துக்கொண்டு ஆலயத்தை அடைந்தபோது வண. குரூஸ் சுவாமியவர்கள் பிள்ளைகளுக்கென அரியதோர் பிரசங்கஞ்செய்து அவர்களின் ஞானப்பூச்செண்டையும், அவர்களையும் தேவதாய்க்கு ஒப்புக்கொடுத்துச் சிறப்பாக ஞானஒடுக்கத்தை முடித்தார். ஆனி11-ந்திகதி மரித்த விசுவாசிகளின் ஞாபகதினமாக அனுசரிக்கப்பட்டது. அன்றுகாலை 6-30 மணிக்குப் புத்தளவிசாரணைப்பங்கில் இறந்துபோனவர்களுக்காக வண. குருஸ்சுவாமியவர்களால் ஓர்துக்கப் பாடற்பூசை நிறைவேற்றி, "மரித்தவர்களை மறக்கவேண்டாம்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு ஓர்பிரசங்கமும் செய்யப்பட்டது. அன்றுசாயந்தரம் 4-30மணிக்குக் குருமார், கன்னியாஸ்திரிமார், பாடசாலைப்பிள்ளைகள், விசுவாசிகள்எல்லோரும் செபமாலைஓதிக்கொண்டு பவனியாகச் சேமக்காலையை அடைந்தார்கள். அங்கே வண. கட்டளைக்குரவர் திவ்வியபூசைநிறைவேற்ற, வண. குரூஸ்சுவாமியவாகளால் ஒலிபரப்பிமூலம் செபங்கள்செய்து, மரணத்தைப்பற்றிய ஓர்பிரசங்கமும் செய்யப்பட்டது. வண யோசெவ்சுவாமியவர்களும பிரசங்கம்செய்தபோதெல்லாம் "இதோ! வரப்பிரசாதத்தின் காலம்; இக்காலத்தை வீணாக்கவேண்டாம்" என்பதைப் பீடிகையாகக் கொண்டு பிரசங்கஞ்செய்தார்.

14-ந்திகதி நோயாளருக்கெனத் திவ்வியபூசை நிறைவேறியது. வண. குருஸ்சுவாமியவர்கள் நோயாளருக்கென ஓர்அரியபிரசங்கம் செய்தார். அன்றுசாயந்தரம் 6மணியளவில் ஆலயமைதானத்தில் பெரியசிலுவைப்பாதை நடைபெற்றது. துன்புறுத்தப்படும் மவுனதிருச்சபையில்அடங்கிய 14நாடுகளினதும் குறிப்பாகப் 14சிலுவைகளைப் 14பேர்சுமந்து அந்தந்தஸ்தலங்களில்நிற்க, வண. குரூஸ்சுவாமியவர்கள் ஒலிபரப்பிமூலம் 14நாடுகளையும்குறிப்பிட்டு அவற்றிற்காகமன்றாடிச் சிலுவைப்பாதையை மிகுந்தபத்தி அருட்சியுடன் நடத்தலானார். மேலும், ஞானஒடுக்ககாலத்திலேநடைபெற்ற தர்க்கப்பிரசங்கங்களினால் அறியாதிருந்த பலவிஷயங்களை அறியமுடிந்தது. முடிவுதினமாகிய 20-ந்திகதி சனிவாரம் வழமைபோல ஆராதனைகள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஷன் ஞாயிறு வீரனைப் பாப்பரசர் ஆசீர்வதிக்கின்றார்

மிஷன்கள் எனப்படும் வேத போதக நாடுகளுக்கெனத் தருமப்பணம் தண்டிக்கொண்டுவரும்போது மதிரித்நகர் வீதியிலே கார்விபத்துக்குள்ளாய்த் தனது காலை இழந்துபோன கேஸர் ஒவாவோர்துவா என்ற 1949-ம் ஆண்டின் ஸ்பானிய மிஷன் ஞாயிறு வீரனுக்குப் பரிசுத்த பாப்பரசர் அன்று ஓர் அந்தரங்க பேட்டி அருளலாயினர். கேஸரின் பொய்க்காலை அவதானித்துவிட்டுப் பாப்பரசர் கூறியதாவது:

"சபாஸ், கேஸர்! மிஷன்களுக்காக நீர் வீரத்துவ தியாகம் வாய்ந்த தொண்டாற்றினீர். நாமும் மிஷன்களுக்காகத் தொண்டாற்றினேம். அஃது ஒரு பெரும் மனோரம்மியமாகும். அர்ச். மேரி மார்கறெற் அலக்கொக்அம்மாள்சாற்றியதுபோல், யேசுவின் திருஇருதயத்திலே அத்தியந்த பக்தி கொண்டிருப்பதானது மரணவேளையில் மன ஆறுதல் உண்டுபண்ணுவதாய் இருக்குமானல், மிஷன்களுக்காகத் தொண்டாற்றுவதும் ஓர் பெரும் மனஆறுதலாய் இருக்கும். இம்மூகாந்திரமாகத் தொண்டாற்றிப் பாடனுபவித்தமையையிட்டு ஒருபோதுமே நீர் கவலைப்பட வேண்டியதில்லை. மிஷன்களுக்காக நீர் செய்துள்ள தியாகம் ஓர்நாள் உமக்கு ஒரு பெரும் சம்பாவனைக்கு ஏதுவாயிருக்கும்."

அதன்மேல் பரிசுத்தபிதா கேஸரையும், பேட்டியில்சமுகமாயிருந்த அவருடைய சகோதரன் ஜூவக்கீமையும் ஆசீர்வதித்தார். அவர்களின் குடும்பத்துக்கும் ஓர் விசேஷ ஆசீர்வாதம் அனுப்பினர். அன்றுதினமே சகோதரர்கள் இருவரும் விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் செயலாளரான பீற்றர் சிகிஸ்மொந்தி அதிமேற்றிராணியாரைச் சந்தித்தனர். அவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் வெள்ளிப்பதக்கம் சன்மானித்தார். அவற்றில் ஒன்று, 23-ம் அருளப்ப பாப்பரசர் திருமுடி சூடியதையும், மற்றது, 12-ம் பத்திநாதரையும் ஞாபகப்படுத்துவனவாகும்.

## தந்தித்தூண்கள்போல் இருக்கவேண்டாம்

அருளப்பபாப்பரசர் சிலதினங்களின்முன் அளித்த பொதுப் பேட்டி ஒன்றில், "பூசையிலே மக்கள் தந்தித்தூண்களைப்போல் இருக்கப்படாது; ஆனல், திவ்விய பூசைப்பலியை ஒப்புக்கொடுப்பதிலே குருவானவருடன் ஒன்றுசேர்ந்துகொள்ளவேண்டும்; ஒவ்வோர் கிறீஸ்தவனினதும் மனத்திலும், இருதயத்திலும் திவ்விய பூசை மகா உன்நதமும், மகா புகழ்ச்சிக்குரியதுமான ஸ்தானத்தை வகித்துள்ளது" எனக் கூறலாயினர்.

—※—

# போர்வீரர்களின் திருயாத்திரை

பதினெரு நாடுகளைச்சேர்ந்த போர்வீரர்கள் 30,000 பேருக்குமேல் சென்ற ஆனிமாதம் 6-ந் திகதி முதல் மூத்தினங்களாக லூர்து திருப்பதிக்கு மகாயாத்திரைஒன்று நடத்தினர்கள். இவர்களில் ஒருதொகையானோர் 21 விசேஷ றெயின்வண்டிகளில் பிரயாணஞ்செய்து அங்கு போயிருந்தனர். மற்றும் ஒருதொகையானோர் விமானங்களில் பிரயாணஞ்செய்து அங்குபோய்ச்சேர்ந்தனர். எல்லாரும் நகருக்கு வெளியில்தான் முகாமிட்டிருந்தனர். பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், ஹலந்து, ஐக்கிய அமெரிக்க தேசம், சிலி, நோர்வே, வெனெசுவெலா, தென்மார்க், ஆஸ்திரியா முதலாம் நாடுகளைச் சேர்ந்த போர்வீரர் இந்த யாத்திரையில் கலந்துகொண்டனர். இவர்களுடன் சுமார் அறுபது சேனுபதிகளும் சென்றிருந்தனர். பரீஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் பெல்தின் ஆண்டவரும், மூனிச்நகரின் வென்டல் அதிமேற்றிராணியாரும், மற்றும்பல மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரும் இந்த யாத்திரையில் கலந்துகொண்டனர். வத்திக்கானிலிருந்து 7-ந் திகதியன்று வானெலிமூலம் பாப்பரசர் இந்த யாத்திரிகர்களுக்கு அனுப்பிவைத்த ஆசிச்செய்தியில் வேதவிசுவாசத்தையும், அதன் ஆவசியகத்தையும் வற்புறுத்தலாயினர். லூர்துபதியின் நூற்றூண்டு விழா ஞாபகார்த்தமாகச் சென்ற வருடம் அத்திருப்பதிக்கு இராணுவ யாத்திரைஒன்று நடந்தேறியது. இது ஓர் சர்வதேசயாத்திரையாக நடைபெறவேண்டுமென்று பிந்தத் தீர்மானிக்கப்படலாயிற்று.

—※—

# சமஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டதாரியான கன்னியாஸ்திரி

ஓர் கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியான சங். சிஸ்றர் கன்டிட்டாஅவர்கள் இந்தியாவிலே பனறெஸ் இந்துச் சர்வகலாசாலையிலே சமஸ்கிருதத்தில் முதல் வகுப்புக்குரிய எம். ஏ. பட்டம் பெற்றிருககின்றார். இவர் சர்வகலாசாலையிலே மாணவ நன்கொடை பெற்றிருந்த 6 வருடங்களிலும், தனது வாழ்க்கையிலே ஓர் சமஸ்கிருத ஆசிரியையாயிருந்த 27 வருடங்களிலும் சமஸ்கிருத இலக்கியத்தை நன்கு கற்றுக்கொண்டார். 1927-ம் ஆண்டு இவர் அர்ச். தெரேசம்மாளின் கார்மேல் சபையிற் சேர்ந்து சென்னைச்சர்வகலாசாலை பி. ஏ. பட்டப்பரீட்சையில் சமஸ்கிருதத்தில் மிகுந்த கண்ணியத்துடன் அரங்கேறினர். அதன்மேல் எர்ணுக்குளத்திலுள்ள தனது சபையைச்சேர்ந்த கல்லூரியில் சமஸ்கிருத ஆசிரியையாயினர். இவர் சமஸ்கிருதம் படிக்கக் காரணம், அதைப்படிக்கும்படியாய்த் தூண்டி இவர் தந்தையார் எழுதியிருந்த ஓர் கடிதமேயாகும். 73 வயதுடையவரான இவர் தந்தையார் பெரிய பண்டிதர். காளிதாசனல்எழுதப்பட்ட உலகப்பிரசித்திபெற்ற சமஸ்கிருத நாடகமாகிய "சாகுந்தலம்" எனும் நூலை மொழிபெயர்த்தவர் அவரே. இதுஉட்பட அநேக நூல்களின் ஆசிரியராயும் அவர் விளங்குகின்றார்.

---

## ஒரு நாளில் பதினொன்கு பேச்சுகள்

எவ்வித கருமங்களிலும் ஈடுபடாது ஞாயிற்றுக்கிழமையிலே சுவாதீனமாயிருக்க வேண்டுமெனத் தாம்ஆசிப்பதாகப் பாப்பரசர் பல்முறைகளில் அறிவித்திருந்தார். ஏனெனில், தாம் அதிகம் கடுமையாகக் கடமையாற்றிவருங் காரணமாகச் சொற்ப இளைப்பாற்றி எடுக்க வேண்டுமென்று அவர் உணர்ந்துகொண்டார். ஆனல், தம்மைத் தரிசிக்க வந்தவர்கள் அத்துணை பெருந் தொகையினராய் இருந்தமையாலே சென்ற வைகாசி மாதம் 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர் இருபகிரங்கபேட்டிகள் அளிக்கவேண்டியவரானர். அவ்விருபேட்டிகளிலும் அவர் விசேஷப்பட்ட குழுவினர்களுக்குப் பதினொன்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தலாயினர். முதலாவது பேட்டி ஆசீர்வாதங்களின் மண்டபத்திலே பியாற் மோட்டர் கம்பெனியைச் சேர்ந்த 4,000 தொழிலாளருக்கு அருளப்படலாயிற்று. இவர்களுடன் தூறின், கிறெமோனு நகர்களிலிருந்து சென்றகுழுவினர்களும் சேர்ந்துகொண்டார்கள். ஒருமணித்தியாலத்தின்பின் அவர் அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தில் பிரவேசித்தார். அங்கே 30,000 மக்கள் அவர்வரவைக் காத்துநின்றூர்கள் அங்கே அவர் அநேகம் குழுவினர்களுக்குப் பேச்சுகள் நிகழ்த்தினர்.

—※—

## மனந்திரும்புதலில் முதன்மைவகிக்கும் போர்மோசா

சுதந்திர தேசியசீனுவின் தலையிடமாகிய போர்மோசா தீவிலே சமீப வருடங்களில் மனந்திரும்புகிறவர்களின் விகிதமானது உலகிலுள்ள மற்றெநத மிஷனரிய நாட்டிலும் மிக உயர்ந்ததாய் இருந்துவருகிறது. இந்த மனந்திரும்புதல்களின் விகிதம் உள்ளபடியே பெரும்பிரமிப்பைத்தருவதாகும். இதற்குப் பெரிதும் காரணம், சீனர்கள் செஞ்சீனுவிலிருந்து போர்மோசாவுக்குப் போய்க்கொண்டிருப்பதே. போர்மோசாவின் கிழக்குக்கரையில் சஞ்சரித்துவருகின்ற பூர்வீக குடிகள் மத்தியிலே பிரான்ஸிய குருமாரும், சுவிஸ் குருமாரும் மகத்தான தொண்டு ஆற்றிவருகின்றூர்கள். இவர்கள் முழுக் குடும்பங்களையும், சாதிகளையும் மனந்திருப்பியிருக்கிறூர்கள். 1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டுவரை போர்மோசாவிலே கத்தோலிககரின்தொகை20,112 பேரிலிருந்து 1,15,000 பேராக அதிகரித்துள்ளது. சென்ற 1958-ம் ஆண்டிலே 75,000 பேர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தஞ் செய்துவந்திருக்கிறூர்கள். முன்சொன்ன ஐந்துவருடங்களிலும் அங்குள்ள குருமார் ஒவ்வொருவரும் சராசரிவீதமாக 57 பேரை மனந்திருப்பியிருக்கிறூர்கள். இந்த மனந்திரும்புதல்களுக்கெல்லாம் முக்கியகாரணமாய்உள்ளது அங்குள்ள மரியாயின் சேனையாளர் ஆற்றிவரும் சிறந்த சேவையேயாகும்.

---

## பாப்பரசரும் பிரான்ஸிய ஜனதிபதியும்

பிரான்ஸிய ஜனதிபதியாகிய ஜெனறல் சாள்ஸ் தெ கோல் அவர்கள் பரிசுத்த ஸ்தானத்துக்கும், பிரான்ஸிய குடியரசுக்குமிடையே நவமான பரஸ்பர சிநேகபான்மைக்கு முத்திரையிடுவதான 23-ம் அருளப்ப பாப்பரசரது வத்திக்கான் பேட்டி ஒன்றுடன் இத்தாலிக்குத் தமது ஐந்துநாள் இராசாங்க தரிசனையை இன்றுதினம் முடித்துள்ளாரெனச் சென்றவெள்ளிக்கிழமை றோமைநகரிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. தமக்குமுன் பிரான்ஸிய ஜனதிபதியாயிருந்த எம். றெனே கோத்திஅவர்கள் 1957-ம்ஆண்டு வைகாசிமாதம் 13-ந் திகதியன்று காலஞ்சென்ற 12-ம் பத்திநாத பாப்பானவரின் பேட்டிபெற்று 25 மாதங்களின்பின் ஜெனறல் தெ கோல் இந்தப் பேட்டியைப் பெறலாயினர். அருளப்ப பாப்பரசர் ஆஞ்ஜெலோ றெங்கல்லி அதிமேற்றிராணியாரென அறியப்பெற்றுப் பிரான்ஸிலே பாப்பரசின் ஸ்தானிகராய் இருந்தபோது இற்றைக்கு ஏழுவருடங்களின்முன் ஜனதிபதி தெ கோல் பரீஸ்நகரிலே அவரைச் சந்தித்திருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** நீதி, பிறர்சிநேக உணர்வினல் உந்தப்பட்டு வீதிகளில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க அனைவரும் உதவும்படியாக வேண்டிக்கொள்வது.

**விசேஷகருத்து:** சியதேசத்தில் திருச்சபையின் அப்போஸ்தல தொண்டு செழிப்படைவதற்காக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஆடிமாதம் 2-ந் திகதி

## கேரள கம்யூனிஸ்தஆட்டம்

"தீபேத்தில் நிகழ்ந்தசம்பவங்கள் கேரளநாட்டுமக்களின் ஞாபகத்தில் இன்னுமே புத்தம் புதியனவாய் இருக்கின்றன; கேரள இராச்சியத்திலுள்ள ஜனநாயகபலங்களின் இன்றைய போராட்டமானது, கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் புராதன தீபேத்தியநாட்டில்நேர்ந்த இரத்தப்பிரவாகமுழுக்குத் திரும்பவும்நிகழாதுதடுத்துவைப்பதற்கும் இன்னும்தலாய்லாமாவுக்கும், அவரைச்சேர்ந்தவர்களுக்கும்நேர்ந்த அதேகதிக்குள்ளாகி நமதுஅன்புக்குரிய தலைவர்களும் வருந்தாது பார்த்துக்கொள்வதற்குமே; பிரதமர்நேருவும், மற்றும் தலைவர்களும் கேரளமக்கள் கொண்டுள்ளகவலையை நோக்குவார்கள்என்பதே எனதுநம்பிக்கையாகும்"என்று அங்கே கம்யூனிஸத்தின் பரமவிரோதியான வண. வடக்கன்சுவாமியார் பிரதமர்நேருவின் கேரளவிஜயத்தின் போதுவிடுத்த ஓர்விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார்.

நிற்க,பிரதமர்நேரு கேரளநாட்டிற்குவந்தார். மூன்றுநாள்தங்கி அங்குபலரையும்கண்டுவிசாரணை நடத்தினர். ஈற்றில், கேரளஅரசாங்கத்தினிடம் பொதுமக்களில் பெரும்பான்மையோருக்கு அவநம்பிக்கையும், அதிருப்தியும் ஏற்பட்டுள்ளதால் அவற்றைப் போக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று ஆலோசனைகூறினர். கேரளத்திலெழுந்துள்ள நெருக்கடியைத் தீர்பதற்குக் கம்யூனிஸ்தர்கள் தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டுப் புதிதாக ஓர் பொதுத்தேர்தலை நடத்துவதுதான் சிறந்தவழியென்றுபிரதமர் சமரசயோசனை கூறினர். கேரளஅரசாங்கத்தின் கல்விச் சட்டத்திலே ஆட்சேபனைக்கிடமான அம்சங்களை நீக்கிவிடுவது நலமென்று பெரும்அரசியல் ஞானியான பிரதமர்நேரு தக்குந்த ஆலோசனைகூறினர்

ஆனல்,புதுத்தேர்தல் நடத்தவேண்டுமென்ற அவரின் ஆலோசனையை இந்தியகம்யூனிஸ்த கட்சி நிராகரித்துவிட்டது. முதுகிலே புண்ணுமில்லை, காடுநுழையப் பயமுமில்லை"என்று வீரத்துடன்எழுந்து கேரளகம்யூனிஸ்தர்கள் ஓர்புதியதேர்தலுக்கு வழிபண்ணினல்என்ன? அங்ஙனம்செய்து தாங்கள் தேர்தலுக்குநின்ருல் மக்களின் ஆதரவு தங்களுக்குக் கிடையாதென்பது அவர்களுக்கு நன்ருகத்தெரியும். அதனல் பிரதமரின் ஆலோசனையை அவர்கள்நிராகரித்தது ஆச்சரியமல்ல. கல்விச்சட்ட தகராறைத் தீர்த்துவைப்பதற்குக் கலந்துவிவாதிக்குமாறு வாருங்கள், வாருங்களென்று அழைப்பிதழ்விடுத்த கூட்டத்திற்குச்செல்லப் பல்வேறுசமயஸ்தாபனங்களையும்சேர்ந்த மேற்றிராணிமாரும், மற்றும்தனிப்பட்ட கிறீஸ்தவபாடசாலைகளின் முகாமைக்காரரும், நாயர்கள் சேவைச்சபைமுகாமைக்காரரும், மற்றுஞ்சில தனிப்பட்டபாடசாலைகளின் முகாமைக்காரரும் மறுத்துவிட்டார்கள். ஏனெனில், இந்தவிவாதம் வெறும்கண்துடைப்பாகவே இருக்கும்; கருமம்ஒன்றும் நடைபெறமாட்டாதென்பதை அவர்கள் நன்கறிவார்கள்.

கேரளகம்யூனிஸ்தஅரசாங்கம் உடனடியாக இராஜிநாமாச் செய்யவேண்டும்என்றே இந்தியா எங்கும் இன்று எதிரொலியாய் ஒலிக்கின்றது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புஇயக்கம் நாளுக்குநாள் வலுவடைந்துகொண்டு வருகின்றது. கேரளத்தில்எழுந்துள்ள கம்யூனிஸ்தஎதிர்ப்புஇயக்கம் விரைவிலே இந்தியாவுக்கும் பரந்துகொள்ளும் என்பதற்கான அறிகுறிகளும் காணப்படாமல் இல்லை. வடக்கேதீபேத்தில்கம்யூனிஸம் வந்துவிட்டது. தெற்கே ஓர்கேந்திரதானமாகக் கேரளா அமைந்துவிடின் அப்பால் இந்தியா கம்யூனிஸ்தமயமாகுமென்று சர்வதேசகம்யூனிஸம் திட்டமிட்டிருப்பின் எவருமே ஆச்சரியப்பட இடமேயில்லை.

---

## ருஷியாவைப் பாருங்கள்

காலத்தோறும்சென்று கம்யூனிஸ்த ருஷியாவையும், செஞ்சீனவையும் தரிசித்துவிட்டுத் திரும்புகிறவர்களிலே அந்நாடுகளுடன் தோழமைகொண்டாடுவாரும், தங்கள் நாடுகளிலும் அவற்றின் நாஸ்திக சமதர்மக் கொள்கைகளைப் பரப்பிவிடுவான் முனைந்துநிற்பாரும் அவ்விருநாடுகளையும் வானமட்டாகப்புகழ்ந்து பாராட்டுவார்கள். அவ்விரண்டிலும் பாலும்தேனும் மடைதிறந்துபாய்வதாகவும், அவைகள் சுவர்க்கலோகமாகக் காட்சியளிப்பதாகவும் பறைசாற்றுவார்கள். ஆனல், ஒழிப்புமறைப்பில்லாது உள்ளதை உள்ளபடியே எடுத்துச்சொல்லுகிறவர்கள். அந்நாடுகளில்வாழும் மக்களின் சுதந்திரமற்ற பரிதாபகரமான அடிமைவாழ்க்கைபற்றிப் பெரிதும்அனுதாபத்துடன் எடுத்துக்கூறுவார்கள். ஆம்இருநாடுகளும் சுவர்க்கபூமியாய்—சுதந்திரநாடுகளாய் விளங்குமானல், வாரந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றிலிருந்து பிறநாடுகளுக்கு — சுதந்திரநாடுகளுக்கு ஏன் தப்பியோடுகிருர்கள்?

ருஷியாவிலும், சீனவிலும் கம்யூனிஸ்தஅரசாங்கம் மக்களுக்குச்செய்துவரும் அட்டூழியங்களை, நாவினல் எடுத்துக்கூறவியலாது. மேற்குவங்காள சட்டசபையின் முன்னைநாள் சபாநாயகரான திரு. சாய்லா குமார் மூகேர்ஜி அவர்கள் மக்கள்சீனவென்று மாண்புடன்அழைக்கப்படும் செஞ்சீனவைத் தரிசித்துவிட்டுத் திரும்பும்வழியிலே அன்று கொழும்பில் புத்தவாலிபர்சங்கத்தில் நிகழ்த்தியசொற்பொழிவில் யாதுகூறினர்? சீனவிலே மக்கள் எருமைகளைப்போன்று கலப்பையில் பூட்டப்பட்டதையும், தங்கள்கரத்திலே சவுக்குகளைக்கொண்ட மனிதரால் வயல்களுக்குஅவர்கள் வழிநடத்தப்பட்டுச் சென்றதையும் தாம் கண்ணுரக்கண்டதாகத் தெரிவித்துப்போனர். இவ்வாருக மக்கள்சீனவில் மக்களுக்குச் செய்யப்படும் அக்கிரமங்களைக் கவனித்தால் அங்கம்பதறும், அகம் பதைபதைக்கும்.

நிற்க, நாஸ்திகருஷியாவில் நடைபெறுங்காரியங்களை அறியவேண்டுமானல் தூரந்தொலைக்குப் போகவேண்டிய அவசியமில்லை. பர்மாவின்தலைப்பட்டணமாகிய றங்கூன்நகரிலுள்ள சோவியற்ருஷிய ஸ்தானிகராலயத்தில் தகவல்அதிகாரியாகப் பதவிவகித்திருந்தார் திரு. அலெக்சான்டர் காஸ்னுச்சீவ் என்பவர். இவர் சென்ற23-ந்திகதியன்று ருஷியஸ்தானிகராலயத்தைக் கைவிட்டு, அங்குள்ள அமெரிக்க ஸ்தானிகராலயஞ் சென்று அடைக்கலம் புகுந்திருக்கின்ருர். அங்கேஇவர் தஞ்சமடைந்தபோது, சோவியற்வெளிநாட்டுச் சேவையைத் தாம்விட்டு நீங்கவிரும்புவதாகவும், கம்யூனிஸ்தஆட்சியால் தாம்ஏமாற்றமடைந்து விட்டதாகவும், அமெரிக்க ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பையும், உதவியையும் தாம் வேண்டுவதாகவும் கூறிகின்ருர். அவர் மேலும் தெரிவித்தது வருமாறு:

"கடந்துபோன எனதுவாழ்க்கையையும், உத்தரவாதங்களையும் விட்டொழிக்க எனதுசொந்தச் சுயாதீனசித்தத்திலேயே நான் தீர்மானித்துக்கொண்டேன். சோவியற்ருஷிய பிரசைகளுக்குக் கிட்டவியலாத ஓர்சுதந்திரவாழ்க்கையை ஆசித்து நான் அடைக்கலம்வேண்டுகிறேன். சோவியற்ருஷியாவிலே தற்போதுநடைபெற்றுவரும் ஆட்சியை நான் அரோசித்து வெறுக்கிறேன். சோவியற்அரசாங்கம் தனதுஇலக்குகளை அடைவதற்காகப் பயங்கரத்தையும், பரிநாசத்தையும்,பொலிஸ்ஆட்சிமுறையையும் பயன்படுத்துகிறது. கம்யூனிஸம் தீங்கானதென்றே நான் நம்புகிறேன். ஏனெனில், அதுமனிதனுக்கு அவனுடைய பெருமையையும், சுயமரியாதையையும் இல்லாமற்போகப்பண்ணுகிறது. கம்யூனிஸம் மனிதனைக்கீழ்த்தரமானபடியிலே இறக்கிவிடுகிறது. அவன் அதிலே கட்சியினதும், ஆட்சிநடாத்தும் தனதுஎசமானகர்களினதும் அடிமையாய்இருக்கிருன்.

"நான் ருஷியமக்களை நேசிக்கிறேன். ஆனல்,சோவியற்அரசாங்கத்தையும், ருஷியமக்களை அடக்கியொடுக்கி இடுக்கண்விளைவிக்கும் குரூரத்தனமான பொலிஸ்சேவை—உளவறியுஞ் சேவைகளை நான் வெறுக்கிறேன். றங்கூன்நகரிலுள்ள சோவியற் ஸ்தானிகராலயத்தில் நான்வகித்திருந்த எனது அதிகாரபதவியை நானகவே கைநெகிழ்ந்துவிட்டேன். ஏனெனில், குரூரத்தனமான — அடக்கியொடுக்குவதான கம்யூனிஸ்த கொடுங்கோன்மையைஎதிர்த்துப்போராட நான்விரும்புகிறேன். சோவியற்ஆட்சியாலும், சர்வதேச கம்யூனிஸத்தாலும் தங்கள்வாழ்க்கை—சமய பாதையிலும், உள்ளபடியே தங்கள்சுதந்திர நிலைமையிலும்ஏற்படும்அபாயங்களைக் கண்டுணருமாறு எனதுபர்மிய நண்பர்களுக்கு மனுப்பண்ணிக் கொள்ளுகிறேன்"என்பதே.

திரு. அலெக்சாண்டர் காஸ்னுச்சீவ்அவர்கள் கூறியதையே இதுவரை சோவியற்ருஷியாவிலும், அதனல் அடிப்படுத்தப்பட்டுக் கம்யூனிஸ்தஆட்சியின் கீழ் நசுக்குண்டுகிடக்கும் போலாந்து, கிழக்குஜேர்மனி, செக்கோசிலவக்கியா, ஹங்கேரி, பால்திக்முதலாம் நாடுகளிலுமிருந்து தங்கள் உயிரையும் கொண்டு, சுதந்திரநாடுகளுக்குத் தப்பியோடிய லட்சக்கணக்கான மக்கள் ஒரேவாய்ப்படக் கூறியிருக்கின்ருர்கள். ஆதலால், ருஷியாதான், சீனதான் பூலோக சுவர்க்கம்என்பது பெரும்பொய்யும், புரட்டுமேஎன்க.

---

## வெளியேறு அல்லது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்தகட்சிக்கு எவ்வளவு போய்ச் சேர்ந்திருக்கிறதுஎன்று தெரியவரும்.

4. கம்யூனிஸ்த செல்வாக்கு இல்லாதகூட்டுறவுச்சங்கங்களைப் பதிவுசெய்யக்கூட ஊக்கம் அளிக்க மறுக்கிருர்கள்.

5. அரசாங்கத்துக்காக நிலங்களை வாங்குவது, தொழில்களுக்கான கடன்தொகைகள் கொடுப்பது, அரசாங்க கட்டடவேலைப் பகுதி ஒப்பந்தம் கொடுப்பது எல்லாம் கம்யூனிஸ்த கட்சியின் நிதியைப் பெருக்கும் கண்ணேட்டத்திலேயே நடந்தது.

6. இப்பொழுது, பொதுமக்களின் சீவாதாரஉரிமைகள் மறுக்கப்படுகின்றன. கேரளாவில் உயிருக்கே பாதுகாப்பு இல்லை.

7. பொதுமக்களின் சேவையாளர்களாக இருக்கவேண்டிய அரசாங்க அதிகாரிகள் கம்யூனிஸ்த கட்சியாட்களாக வேலை செய்யும்படி நிர்ப்பந்தம் செய்யப்படுகிருர்கள்.

8. பொலிசார் கம்யூனிஸ்த கட்சியின் ஊழியர்கள் ஆகிவிட்டார்கள். கம்யூனிஸ்தர்களுக்குப் பிரியப்படுமாறு பொலிஸ் பொதுமக்களை இம்சிக்கிறது.

9. கம்யூனிஸ்தர்கள் சட்டம், கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட சலுகைச் சமூகம் ஆகிவிட்டனர். தண்டிக்கப்படுவோம் என்ற அச்சம் கம்யூனிஸ்தர்களுக்கு அற்பமும் இல்லை. அவர்கள் என்ன குற்றம் செய்தாலும் கேள்வி கிடையாது. அவர்கள்மீது என்ன வழக்குத் தொடரப்பட்டாலும், அது உடனே கைவிடப்படுகிறது.

10. கம்யூனிஸ்தர் அல்லாத விவசாயிகளுக்கு எல்லாவித உரிமைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. நிலத்தில் பாடுபட்டவன் தனது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

### யார் பொறுப்பாளிகள்?

"இலங்கையில் விரைவிலே ஒருபஞ்சம் ஏற்படலாம். நாடு மோசமான நிலைக்குப் போகிறதென்று சொல்லி நீதிமந்திரி பதவியிலிருந்து திரு. எம். டபிள்யு. எச். டி சில்வா இராசிநாமாச் செய்திருக்கின்றார். இந்தநிலைமைக்கு யார் பொறுப்பாளிகள்? அவரும் ஒரு பொறுப்பாளி இல்லையா? இந்த அரசாங்கம் மேலும் இருவருட காலத்துக்குநீடித்திருந்தால் நாடு வங்குரோத்தாகிவிடும்."

**திரு. எம். டி. எச். ஜயவர்த்தன,**
முன்னை நாள் நிதிமந்திரி

### சுதந்திரக்கட்சி முரிந்துவிடும்

"ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் ஐக்கியதேசியக்கட்சி சேருமானால் நாட்டுக்குப் பெருந்துரோகம் செய்தவர்களாவோம். அதேபோல் திரு. பிலிப் குணவர்த்தனவுடனும் எவ்வித சம்பந்தமும் எங்களுக்குக் கிடையாது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முடிவு காலம் நெருங்கிக்கொண் டிருக்கிறது. விரைவிலே பொதுத்தேர்கல் நடத்தாவிட்டாலுங்கூட அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சி படுதோல்வியடைவது நிச்சயம். தனது ஆட்சியில் தொடர்ந்திருப்பதற்காகத் திரு. பண்டாரநாயகா எம். பி. களுக்கு லஞ்சம் கொடுக்கிறார். அவர் 26 மந்திரிகளை நியமிக்கும்காலமும் வரக்கூடும். சுதந்திரகட்சிக்குள்ளேயே நெருக்கடிநிலவுவதால் விரைவிலே அந்தக்கட்சி முரிந்துவிடும்."

**திரு. டட்லி சேனநாயகா**
முன்னை நாள்பிரதமர்

### அதேஅன்பையும், கருணையையும்

"உங்கள் நாட்டுடன் மிகவும் ஆழப்பதிந்த உறவுகளைக்கொண்ட ஒருநாட்டிலிருந்து நான்வந்திருக்கிறேன். அந்தப் பாரதநாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது சமயம் மாத்திரமல்ல. அந்நாட்டின் சனத்தொகையில் ஒரு பகுதியினர் ஆதிகாலத்தில் இங்குவந்து குடியேறி நிரந்தரபிரஜைகளாக வாழ்ந்துவருகிறார்கள் என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன். எங்களிடையே சமயபாரம்பரியம்மட்டும்இருக்கவில்லை. அதற்குமேலாக இரத்தஉறவும் இருக்கிறது. இரத்தஉறவில் நாங்கள் சகோதரர்கள். இலங்கை தனதுமக்கள்மீது காண்பிக்கும் அதே அன்பையும், கருணையையும் இந்தியமக்கள்மீதும் காண்பிக்குமென நான் நம்புகிறேன்."

**டக்டர் இராஜேந்திர பிரசாத்,**
இந்திய ஜனாதிபதி.

### பேடித்தனமான செயல்

"இலங்கையில் சிங்களம் மட்டுமே அரசகருமமொழியாய் இருக்வேண்டுமென்ற கொள்கை 1956-ம் ஆண்டுக்கு முன் எந்தஅரசியற்கட்சியிடமும் இருந்தது கிடையாது. தனிச்சிங்களத்தை எந்தக்கட்சியும் ஆதரிக்கவில்லை. தேர்தலில் வெற்றிபெறும் நோக்கத்துடன் 1956-ம் ஆண்டில்தான் இந்த அருவருக்கத்தகுத்த பிரச்சினையை அரசியல்வாதிகள் கிளப்பினார்கள். இந்தக் கொள்கையை ஓர் அரசியல் சித்தாந்தமாகக்கருதுவது பேடித்தனமானது. அத்துடன் மடமைநிறைந்த ஓர் காரியமுமாகும்."

**திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,**
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

### காலப்போக்கில் ஒழிந்துவிடும்

"தேர்தலில் வெற்றிபெறும் நோக்கத்துடன் செய்யப்பட்ட தனிச்சிங்கள சட்டம் நிலையானதொன்றல்ல. அது காலப்போக்கில் மாற்றமடையலாம். ஆட்சிக்குவரும் மற்றோர் அரசியற்கட்சி இந்தச்சட்டத்தை இல்லாமற்பண்ணலாம். இதுமட்டுமல்ல. அரசியற் கருத்துகளும் அவ்வப்போது மாறுதலுக்குள்ளாகும் காரணத்தால் மொழிக் கொள்கையும் மாற்றமடையலாம். அதிகம்விரைவிலே இந்நாட்டில் ஒரு பொதுத்தேர்தல் நடக்கக்கூடும். அதன்மூலம் நமக்குச் சாதகமானநிலை ஏற்படலாம்."

**திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,**
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

### தமிழர் சுகம் அனுபவிக்கவில்லை

"மனிதனை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று வெவ்வேறு போர்வைகளை அணிவித்துப் பிளவுபடுத்தும் பொருளாதார சீர்கேடு ஒழியவும், மக்களிடையே சமத்துவம் நிலவவும் ஒத்துழைக்கவாரீர்! ஒருநாடு பொருளாதாரத்துறையில் பின்தங்குவதற்குப் பலமொழி பேசும் மக்களின் மனவேறுபாடே காரணமாகும். இலங்கை சுதந்திரமடைந்தும் தமிழர்கள் அதன் சுகத்தை அனுபவிக்கவில்லை. பொருளாதாரத்துறையிலும், வியாபாரத்துறையிலும் பின்தங்கியிருக்கும் தமிழினம் முன்னேறக் கூட்டுறவு வாழ்வு பெரிதும் உதவிசெய்யும்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

### என்னசெய்ய வேண்டும்?

"இலங்கையில் இன்று ஏற்பட்டிருப்பது அரசியற்பிரச்சினையேயன்றி மொழிப்பிரச்சினையல்ல. இந்த அரசியற்பிரச்சினை தமிழனை நசுக்கும் ஒரு பிரச்சினையாகவே இருந்துவருகிறது. 'இது எமதுநாடு; இந்நாட்டில் நாமும் தலைநிமிர்ந்து நிற்கலா'மென்று நாம் எண்ண முடியாதவர்களாய் இருக்கிறோம். இவ்வாறெல்லாம் இடையூறுக்குள்ளாகியிருக்கின்ற நாம் இந்த இன்னலைப்போக்க என்ன செய்ய வேண்டும்? பொதுமக்களைப்பொறுத்தவரை கையாளக்கூடிய காரியம் ஒன்றுண்டு. எமது மொழிஉரிமையை என்றுமே விடமாட்டோம்; அந்த மொழிக்கு இரண்டாவது இடமளிக்க அனுமதிக்க மாட்டோமென்று எல்லோரும் பிரதிக்கினை செய்துகொள்வோம்."

**திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,**
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

### உணவுநிலப் பிரச்சினைகள்

"நாட்டின் ஏனைய பகுதிகளிலே காடாய்க்கிடக்கும் பகுதிகளில்சென்று குடியேறி உணவுப் பிரச்சினையையும், குடியிருக்கும் நிலப்பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ள யாழ்ப்பாணக்குடாநாட்டில் வாழும்மக்கள் முன்வரவேண்டும். யாழ்ப்பாணத்தில் குடியிருக்கும் காணிக்கு ஒருபரப்பிற்கு மூவாயிரம் நாலாயிரம் ரூபாகொடுத்து வாங்கிக் குடியிருக்கப் போதிய இடமில்லாது கஷ்டப்படுவதிலும் வெளியிடங்களில் சென்று குடியேறிப் பிற்கால சந்ததியாருக்குக் குடியிருக்கும் நிலப்பிரச்சினையைத் தீர்த்துவையுங்கள்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

### கண்ணிருந்தும் குருடரைப்போல்

"ஒருஅங்குல நிலத்துக்காக உடன்பிறந்தாரோடு வழக்காடும் தமிழர்கள் நமது தமிழ்ப்பிரதேசம் நாளுக்குநாள் ஆக்கிரமிக்கப் படுவதைக் கண்ணிருந்தும் குருடர்களைப்போல் கவனியாதிருப்பது கவலைக்குரியது. இந்தநிலை நீடிக்குமானால் அதன்விளைவு பெரிதும் விபரீதமாகவே இருக்கும். இனியாவது தமிழ்ப்பிரதேசங்களில் குடியேறி அவற்றைப் பாதுகாக்கத் தமிழர்கள் முனைவார்களாக!"

**திரு. சி. வன்னியசிங்கம்,**
கோப்பாய் எம். பி.

---

## அன்று லூர்துபதியிலே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யால் நோயாளரைப் பராமரிக்கும் அந்தநல்லதாதிகளான கன்னியாஸ்திரிமார் நான் திருக்கெபிக்குக் கொண்டுபோகப்படக் கூடாதென்று புத்திகூறினார்கள். நீராடுமிடத்திலும் கன்னியாஸ்திரிமார் திரும்பவும் என்னைத் தாமதிக்குமாறு சொன்னார்கள். ஆனல், நானே அவர்களைநோக்கி, நான் சாகிறதாயிருந்தால் லூர்துபதியாகிய இந்தப்புனிதபதியிலே சாகிறதுநல்லது எனப் பகர்ந்தேன். நான்கிடந்த தூக்கிச் செல்லும் படுக்கையோடுதானே தண்ணீருள் இறக்கப்பட்டேன்.

"நான் தண்ணீரைத்தொட்ட போது எனக்குக் குளிர்தோன்றவில்லை. ஆனல், நான்சுகசீவியாய் இருப்பதாக ஓர்வித உணர்ச்சி எனக்குஉண்டாயிற்று. கன்னியாஸ்திரிமார் திரும்ப எனக்கு உடைஅணிந்தபோது அற்பவருத்தந்தானும் எனக்குத்தோன்றவில்லை. தள்ளிச்செல்லும் சிறிய அம்புலன் ஸில்வைத்து ஆஸ்பத்திரிக்கு நான்திரும்பவும் தள்ளிக்கொண்டு போகப்பட்டபொழுது வருத்தமேஇருக்கவில்லை. ஆஸ்பத்திரியிலே என் அங்கமுழுவதையும் எனதுகைகளைஇட்டுத் தடவிய போது அதிலிருந்தவிரணக்கட்டிகளெல்லாம் மறைந்து அற்றுப் போயிருக்கக் கண்டேன். என்னைப்பரிசோதிக்கும்படியாக ஓர்கன்னியாஸ்திரியைக் கேட்டேன். அவரும்பரிசோதித்து விரணக்கட்டிகளெல்லாம்போய் அவைகள்இருந்துவந்த இடங்களில் பெரியதழும்புகள்மட்டுமே இருக்கக்கண்டார். டக்றர் அழைக்கப்பட்டார். அவரும் வந்து பார்த்துவிட்டு நான்பூரணமாகக் குணமடைந்துவிட்டதாக உறுதிபகர்ந்தார். ஆனல், அமைதியர்கப் படுக்கையிலே கிடக்கும்படியும், நான்குணமடைந்ததைப் பற்றி எவருக்குமே ஒருவார்த்தையும் சொல்லாதிருக்கும்படியும் எச்சரித்து எனக்குப்புத்திகூறினர்.

"மறுநாட்காலை எமது யாத்திரையைக்கவனிக்கும் டக்றர்வந்து எழுந்துநிற்கும்படி என்னைக்கேட்டார். எழுபதுபடுக்கைகளைக் கொண்ட ஒருபெரியவாட்டிலே எனதுபடுக்கைஇருந்தது. தாமதமின்றியே பதமையாய், ஆனல், உறுதியாய்ப் படுக்கையைவிட்டு எழுந்துநின்றேன். எவர்உதவியுமின்றியே வாட்டின்முழுநீளமும் நடந்துசென்றேன். எவ்விதமயக்கமோ அன்றேல் எந்தவிதமான பலவீனமோ எனக்குத்தோன்றவில்லை.

"அதன்மேல்உடனடியாகப் பிரான்ஸிய, ஆங்கில, ஜேர்மன் டக்றர்மாரைக்கொண்ட ஓர்கமிஷன்முன் நான்தோன்றினேன். எனதுநோய் அதிமிக கரிசனை எடுக்கவேண்டிய ஒருநோயென்றும், மேலும்பரிசோதனைநடத்த வேண்டிய ஒருநோயென்றும் அவர்கள்குறிப்பிட்டார்கள்."

தனதுவீட்டுக்குத்திரும்பும் பிரயாணத்தின்போது செல்விறூன்ஸ்ற் றெயின்வண்டியின் தொடர்வழிகள்மூலம் அங்கும் இங்குமாகச்சென்று குணமடையாது வீட்டுக்குத்திரும்பும் ஏனைய நோயாளர்களுக்கு ஆறுதல்தரும் வார்த்தைகள்கூறி அவர்களைச் சந்தோஷப்படுத்துவதிலே தனது நேரத்தைச் செலவிட்டாள். லியோர்என்ற தனதுசிறிய பட்டினத்தைச்சேர்ந்ததும் அவள் நேரே தனதுபங்குக்கோவிலாகிய திருக்குடும்பகோவிலுக்குச் சென்றாள். பெருந்தொகையான பக்தர்கள் குழுமியிருந்தசமுகத்திலே கிருதிக்குச்சென்று நன்றியறிந்ததோத்திரமாகத் திவ்விய நன்மை பெற்றுக்கொண்டாள்.

---

### விவேகப் பரீட்சை

அகிலஇலங்கையிலும் பதினொரு முதல் பதினறரைவயதுடைய மாணவர், மாணவிகளுக்கெல்லாம் வருகிற புரட்டாசிமாதத்திலே ஒருவிவேகப் பரீட்சை நடத்துவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆங்கிலம், தமிழ், சிங்களம்என்னும் மூன்றுபாஷைகளிலும் இப்பரீட்சை நடத்தப்படும். ஏறக்குறைய ஏழுலட்சம் மாணவர், மாணவிகள் இப்பரீட்சையில் கலந்துகொள்வார்கள். எழுத்துமூலமும், வாய்மொழிமூலமும் பரீட்சைநடைபெறும். பரீட்சைப்பேறுகள் அவர்களின் வரலாற்றுப்புத்தகங்களில் பதியப்படும். திறமைவாய்ந்த மாணவர், மாணவிகளைத் தெரிந்தெடுத்து அவர்களை விஞ்ஞான கல்வித்துறையில் பயிற்றுவதே இப்பரீட்சையின் நோக்கமாகும்.

---

விளைவை அறுவடைசெய்வது வெகு கஷ்டமாக இருக்கிறது. (கம்யூனிஸ்தர்கள் பறித்துக் கொண்டுபோனல்கேள்விஇல்லை. எதிர்த்தால், கத்திவெட்டு!)

11. கேரள மக்களின் மத உணர்ச்சி உரிமைகளைக் கம்யூனிஸ்த அரசாங்கம் பகிஷ்கரித்து விடுகிறது.

12. மதப்பற்றுதல், ஒழுக்க முறைகளை வளர்க்கும் தனியார் பாடசாலைகளை நாசமாக்கி நிர்மூலம் செய்வதற்கான கல்வித் திட்டம் புகுத்தப்படுகிறது.

13. குழந்தைகள் கல்வி கற்க வேண்டிய கருவிகளாகிய பாடப் புத்தகங்கள்எல்லாம் கம்யூனிஸ்த கட்சியின் பிரசாரத் துண்டுகள் ஆகிவிட்டன.

14. மாணவர் இயக்கங்கள் அடக்கப்படுகின்றன. படிக்கப் புத்தகங்களோ, போதிக்க ஆசிரியர்களோ காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை.

15. ஏழைகளுக்கு நியாய விலையில் அரிசிவழங்க எவ்வித நடபடிக்கையும் இல்லை.

16. தொழில் வளர்ச்சிக்கும், வேலைஇல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் முயற்சிகள் எதுவும் இல்லை.

17. தனியார் தொழில்கள் வளர அநுமதி இல்லை. இப்படி இன்னும் 20 குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

பொது மேடைகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் "மக்களின் ஜனநாயகக் கட்சி", "தொழிலாளர்களின் தோழன்", "ஏழைகளின் இரட்சகன்" என்று தேன் ஒழுகப்பேசிப் பாமர மக்களை வஞ்சித்து, நாஸ்திக வலையில் சிக்க வைத்து, பலாக்காரத்தால் பிறப்புரிமைகளைப் பறிக்கும் இந்த ஏமாற்றுத் தொழிலின் எமகண்டர்களின்கட்சி இன்னும் தொடர்ந்து ஆட்சிசெய்யக் கூடாது என்று சுதந்திரத்தாகம் கொண்ட சாத்வீகத் தொண்டர்கள் நடத்தும் அறப்போர் சரியா இல்லையா? வெற்றிபெற வேண்டுமா வேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த செபமாலைப் படையணி யாளருக்கு ஒருசெய்தி

பரிசுத்த செபமாலைப்படையணியின் 12-வதுவயது இதோ பூர்த்தியடையப் போகின்றது. 1960-ம் ஆண்டிலே அதன் 13-வது வயது தொடங்கும். கடந்த பன்னிருவருடங்களிலும் இச் செபச்சேனை பாத்திமாநாயகியின் அபயக்குரலை ஓரளவுக்குப் பகிரங்கப்படுத்தியுள்ளது. தேவஅன்னையின் வேண்டுகோளாம் செபமாலைப்பக்தி, பரித்தியாகசீவியம், முதற்சனிக்கிழமை அநுசரணை முதலியன முன்னேற்றமடைய அது முயன்றுள்ளது. முப்பதினுயிரவருக்கு மேற்பட்டவர்கள் அதிலே இதுவரை அங்கத்தவராய்ச் சேர்ந்துள்ளனர். இத்தனை பேருமதங்கள் பொருத்தனைகளிற் பிரமாணிக்கமாய் இருந்தால் என்ன பெரும் பாக்கியம்! அப்படி இருக்கிறார்களா என்பதுதான் ஒரு பிரச்சினை. எப்படியிருந்தாலும் இச்செபச்சேனையிற் சேர்ந்ததினால் பலரின்சீவியம மறுமலர்ச்சியடைந்ததென்றும், அவர்களின் ஆத்தும இரட்சணிய வாஞ்சையும், அப்போஸ்தலிக்க தொண்டும் பலுகினவென்றும் நாம் திட்டமாய் அறிவோம். சில சூழ்நிலைகளும், கிராமங்களும் கிறீஸ்தவ அநுசரணைகளில் மறுமலர்ச்சியடைந்தன என்பதும்கண்கூடு. அதனால் சர்வேசுரனுக்குத் தோத்திரம்; அமலோற்பவநாயகிக்கு மங்களம்.

கத்தோலிக்கஉலகம் 1960-ம் ஆண்டினை ஆவலாக எதிர்பார்த்திருக்கிறது. நாகவல்லமையால் அல்லோலகல்லோலப்படும் இவ்வுலகம் இன்னும் வெளிப்படுத்தப்படாதிருக்கும் பாத்திமா இரகசியத்தில் ஏதோ நிவாரணம் உண்டு என்று எதிர்பார்த்தவண்ணமாய் இருந்தது. 1960-ம் ஆண்டிலே உலகினை மூடியிருக்கும் அந்தகாரப்படலம் நீங்கும், மனுக்குலத்தைஆட்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு அகலும்என்று எதிர்பார்த்திருந்தோம். ஆயின், தற்போது நாம் அறியக்கிடக்கிறபடி — அதாவது சென்ற 6-ந்தேதி ஆங்கில கத்தோலிக்க சஞ்சிகை (Catholic Messenger)யில் வெளியான சம்பவம் நாங்கள் எதிர்பார்த்ததற்கு முற்றுப்புள்ளி போட்டதுபோலானது. எங்கள் பீடையை இன்னும் அதிகரிக்கச் செய்வதாகின்றது. பாத்திமா காட்சியாளியாம சங். லூசியா கன்னியாஸ்திரி கடைசியாக வெளியிட்டுள்ள சம்பவம, பாத்திமா நாயகியின் அழைப்புக்கு உலகம் இன்னும் சரியாய்ச் செவிசாய்க்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. அண்மையிலே வண. அகுஸ்தீன புவென்றஸ் எனும் குருப்பிரசாதி சிஸ்றர் லூசியாவைப் பேட்டிகண்டார். இக்குரவர் லூசியாவுடன் பாத்திமா காட்சியில் பங்குபற்றிய பிரான்சிஸ்கோ, ஜசிந்தா இவர்களின் முத்திப்பேறுபெற்ற பட்டத்துக்கு ஆவனசெய்யக் குறிக்கப்பட்டவர். மேற்படி பேட்டியில லூசியா கூறியதாவது: “சுவாமியாரே, என்னை நம்புங்கள்; தேவன் உலகத்தைத் தண்டிக்கப்போகிறார்; அதுவும மிகஉக்கிரமாக! வானலோக பயங்கரஆக்கினை காத்துக்கொண்டிருக்கிறது; 1960-ம் ஆண்டு தூரத்திலில்லை; அப்போது சம்பவிக்க இருப்பது யாவருக்கும் மிகவும் பிரலாபமான சம்பவம்; அதற்கு முன்உலகம் செபமுந்தபமும் செய்து ஒப்புக்கொடுக்காவிடில்...”

படையணி வீரருக்கு இங்கு ஓர் அழைப்பு! மாதாவின் தொண்டருக்கு ஒரு வேண்டுகோள்! ஆபத்து அண்மியிருக்கையிலே அசமந்தத்தில் தூங்கியிருப்பவன் அவிவேகி. அதற்குப்பதில் ஆபத்து நெருங்கநெருங்க உற்சாகமும், சுயமுயற்சியு முள்ளவனுயிருப்பவன் விவேகி. சலப்பிரளயம் கிட்டக்கிட்ட எவ்வளவுக்குத் தேவபயமும், விசுவாசநடத்தையும் விசுவாசங்கெட்ட சந்ததியிடம் தளர்ச்சியடைந்ததோ அதற்கு நேர்விரோதமாய் நோவேகுடும்பத்தாரின் விசுவாச உணர்ச்சியும், சுயமுயற்சியும் ஊக்கமடைந்தன. அதேபோல்பாத்திமாமாதாவின்வெளிப்படுத்தல்களில விசுவாசமுள்ள எங்கள் விசுவாசஉணர்ச்சியும் அதிகரிக்கவேண்டும். நாங்கள் செய்துகொண்ட பொருத்தனைகளில் பிரமாணிக்கமாயிருப்போமாக! மற்றவர்களைச் செப சீவியத்துக்கும், பரித்தியாகத்துக்கும் தூண்டுவோமாக!

நம்மவர்மத்தியில் தற்போது சில பயங்கர தகவல்கள் உலாவுகின்றன. தேவகோபத்தைவிளக்குஞ்சம்பவங்கள் நடைபெறவிருப்பதாகச் சில பத்திரங்கள் அடிபடுகின்றன. இவைகள் சில பரிசுத்தஆத்துமங்களின் வெளிப்படுத்தல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன. கடைசியாய் வெளியான சங். சிஸ்றர் லூசியாவின் எச்சரிக்கையுடன் ஒப்புநோக்கும்போது மேற்படிவிடயங்களை நாங்கள் அசட்டைபண்ணுதல் புத்தியாகாதுபோல் தோன்றுகிறது.

கருமம் எவ்வாறுயினும் நம்பிக்கைக்கு இன்னும இடமுண்டுஎன்பதை லூசியாவின் கடைசிப்பதங்கள் காட்டி நிற்கின்றன. அதாவது, “இதற்கு முன் உலகம் செபமுந்தபமும் செய்து ஒப்புக்கொடுக்காவிடில் .. ” எனும் கூற்று. எனவே, எங்கள்ஆர்வத்தைப் புதுப்பித்து நம்பிக்கையைத் தூண்டுவோமாக. வரவிருக்கும் தேவகோபாக்கினையைத் தவிர்க்கும்மார்க்கம் எங்களிடம் உண்டு. எங்களால் இயன்ற சிறியஅளவில் நாங்கள் முயற்சி செய்தால் எங்களால் உலகத்தை மாற்றமுடியும். தேவகோபாக்கினியைத் தடுக்க முடியும். இதைவிட்டு இந்தப் பாரிய வேலையைச் செய்ய நம்மால் மாளுமா வென்று ஏங்கி வாளாவிருத்தல் மாதாவின் மைந்தருக்கு அழகல்ல.

**Director,**
Holy Rosary Compoign,
Bosco's, Hatton.

---

சங். சகோதரர்

## எஸ். அலோசியஸ், F. B. M.

## அவர்களின் மறைவு

கடந்த 44வருடகாலமாக அர்ச். மரியாயின் பிரான்சீஸ்குவின் மூன்றும்சந்நியாச சபையில் ஒருதுறவியாயிருந்து தேவனுக்குத் திருப்பணியாற்றிய சங். சகோதரர் எஸ். அலோசியஸ்அவர்கள் சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற வைகாசி மாதம் 17-ந்திகதி ஞாயிறுவாரம் காலை 2மணிக்கு மாத்தளை, அரசினர்வைத்தியசாலையில் அந்தியதேவதிரவியஅநுமானங்களைக் குறையற நல்லறிவுடன் பெற்று மரணமாயினர்.

இவர் யாழ்ப்பாணம், நாவாந்துறையிலே 1889-ம்ஆண்டு ஆடிமாதம் 27-ந்திகதி பிறந்தார். தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்துத் தமது 25-ம்பிராயத்தில் — அதாவது 18-3-1914-இல் மகோனு, அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றும்சந்நியாசசபையில் பிரவேசித்தார். 1915-இல் சந்நியாசவார்த்தைப்பாடுகொடுத்துத் தேவனுக்குத் திருப்பணிபுரிய ஆரம்பித்தார்.

1948-ம்ஆண்டுவரை மகோனு, அர்ச். வின்சென்ற் டீ போல் அநாதசாலை, தியலகொட, தொன்பொஸ்கோ அநாதசாலைப் பிள்ளைகளை நடத்துவதிலும், நன்னெறியாக்கச்சீர்திருத்தப்பாடசாலையின் நோய்வாய்ப்பட்டபிள்ளைகளைப் பராமரிப்பதிலும், மகோனுவில் ஒருகைத்தொழிற்சாலையைத்தொடக்கி அதில்நெசவுதொழிலைப் பயிற்றுவதிலும் ஈடுபட்டார். சிலாபம், வெண்ணப்புவ, நீர்கொழும்பு கடற்கரைத்தெரு முதலானஇடங்களில் கல்வி கற்பிக்கும சபைச்சகோதரர் ஸ்தாபனங்களில் அவர்களுக்கு உதவிபுரிவதோடு குருமாருடன் ஒத்துழைத்து விசுவாசப்பரப்புதற்சபை வேலைகளிலும் உதவிபுரியலானார். 1949-இல் மாத்தளை, அர்ச். மரியாயின் பிரான்சீஸ்குவின் மூன்றும்சந்நியாசசபைத் தாய்மடத்திற்கு மாற்றப்பட்டு அங்குதமது தள்ளாப்பிராயத்திலும் மனம்சலியாது உழைத்தார். 1950-இல் முழுச்சபையினதும் பொதுப் பொக்ஷாதிபராக மூன்றுவருடகாலம் கடமையாற்றினார். 1954-இல் மாத்தளை, அர்ச் பிரான்சீஸ்குவின் அநாதசாலைப் பிள்ளைகளைநடத்துவதில் தமது கடைசிகாலத்தைச் செலவழித்தார். சென்ற சித்திரை மாதம் நோய்வாய்ப்பட்டு ஒருமாதகாலமாக வைத்தியசிகிச்சைபெற்றும் குணமுறாது மரணத்திரையில் மறையலானார்.

இவரதுசடலம் சபைச்சிரேஷ்டர்களால் வைகாசி 17-ந்திகதி ஞாயிறுவாரம் தாய்மடத்திக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்குள்ள சிறுாலயத்தில் விசுவாசிகள் தரிசிப்பதற்காகவைக்கப்பட்டது. 18-ந்திகதி காலை 6மணிக்கு ஸ்தாபனபரிபாலனரான வண. அகுஸ்தீன் போல் ஒ. எவ். எம். சுவாமியவர்களால் அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஒருதுக்கப்பூசை நிறைவேறியது. பின்னர் சாயந்தரம் 4மணிக்கு அதேகுருப்பிரசாதியால் அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியதும், யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சங். சகோதரரின் சகோதரர், இனபந்துக்களால் சடலப்பேழை தாங்கச் செல்லப்பட்டு மோட்டார் இரதத்தில்வைத்துப் பலகுருப்பிரசாதிகளும், அர்ச். சூஸையப்பர்சபைச் சங்.சகோதரர்கள், சிலாபம், மகோனு, றம்புக்கனை முதலாம் இடங்களிலிருந்துவந்த பிரான்சீஸ்கன் சபைச்சகோதரர்கள், அர்ச். தோமையார்கல்லூரி ஆசிரியர், மாணவர்கள், அர்ச். பிரான்சீஸ்குவின் அநாதைசாலைச்சிறுவர்கள், நூற்றுக்கதிகமான விசுவாசிகள், இனபந்துக்களும் துக்கசங்கீதங்கள், செபங்களுடன் மாத்தளைப் பங்குக்கோவிலைச் சேர்ந்தனர்.

அங்கும் வண. அகுஸ்தின் போல்சுவாமியார் மற்றும்குருமாருடன் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றினர். பின்னர் தொடர்ந்து பவனியாகப் பொதுச்சேமக்காலையைச்சேர்ந்ததும் அங்கு மாத்தளைப் பங்குக்குரவர் வண. போல் பெரேரா சுவாமியவர்களால் பலகுருப்பிரசாதிகள், ஞானச்சகோதரர்கள், பாடகர்குழாமுடன்சேர்ந்து கடைசிஆசீர்வாதம் கூறப்பட்டபின் நல்லடக்கம்நடைபெறலானது. காலஞ்சென்ற சகோதரரின் பிரிவால் வருந்தும் சபைச்சிரேஷ்டாதிபருக்கும், ஞானச்சகோதரர்களுக்கும், இனபந்துக்களுக்கும் எமது ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

R. I. P.

---

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

### பூசைப்பரிசாரகர் தினம்.

நமதுபங்கின் பூசைப்பரிசாரகர் பத்திச்சபையினர் தங்கள்பாதுகாவலரான அர்ச். ஞானப்பிரகாசியார்திருநாளை மிகுந்தபத்திபற்றுதலுடன் கொண்டாடினர். 20-6-59 சனிவாரமன்றுமாலை ஆலயவளவில் இச்சபைச்சிறுர்கள் ஆனந்தம்மேலிட ஆடிப்பாடி அலங்காரஞ் செய்துகொண்டிருந்த காட்சியானது பார்த்தோர் உள்ளங்களைப் பரவசப்படுத்தியது. ஆலயம், பலிபீடம், அர்ச். ஞானப்பிரகாசியார்பீடம் என்பனவற்றை மிக்கமாட்சிமைதோன்றச் சிங்காரித்தனர். நேரம் 6-30 மணி. இவர்கள் பூசைப்பரிசாரகருக்குரிய தங்கள் நீண்டஅங்கிகளுடன் செபமாலை, பிரார்த்தனை, மாலைஆராதனை, திவ்விய நற்கருணைஆசீர்வாதம் என்பனவற்றில் கலந்துகொண்டனர். கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் தலைமைதாங்கி யாவற்றையும் நடாத்திவைத்தனர்.

திருநாளாகிய ஞாயிறன்றுகாலை ஆலயமணிகள் இச்சிறுரின் ஆனந்தங்காண ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தன. 5-30மணி. கட்டளைக்குரவர் 1-ம்பூசை நிறைவேற்றினர். 2-ம்பூசை கிழக்கிலங்கைக் கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் வண. ஈ. கிறவுதர்சுவாமிகளால் பாடற்பூசையாக நிறைவேறியது. பூசைப்பரிசாரகருக்கென நன்மதிகள்நிறைந்த ஓர்பிரசங்கமும் செய்யப்பட்டது. வழமைப்பிரகாரம் அன்றுகாலை 7மணிக்குக் கட்டளைக்குரவர் ஆயித்தியமலையில் 2-ம் பூசை பாடற்பூசையாக நிறைவேற்றினர். அன்றுபிற்பகல் 4மணியளவில் ஞானோபதேசவகுப்பைத் தொடர்ந்து செபமாலை, பிரார்த்தனைசொல்லித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது.

அதன்மேல் கட்டளைக்குரவர்தலைமையில் பூசைப்பரிசாரகர் ஒன்றுகூடிக் கிளென்னிபெண்கள்பாடசாலையில் களியாட்ட தேநீர்விருந்தொன்று நடத்தி மகிழ்ந்தனர். அவ்வமயம் கிளென்னி ஆண்கள்கழகஆசிரியர் செல்வன், செல்வம் யோசெவ் அவர்களாலும், அரியம் யோசெவ், ஏ. யோசெவ் கனகசிங்கம், அந்தோனிப்பிள்ளை யோசெவ்ஆகியவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. ஈற்றில்கட்டளைக்குரவர் அர்ச். ஞானப்பிரகாசியாரின் சீவியசரிதையை எடுத்துக்கூறித் தேவ அழைத்தலுக்குச் செவிசாய்க்கத் தகுதியுள்ளவர்கள் பத்திச்சுறுசுறுப்புடன் செபம், ஒறுத்தல், அமைச்சல், பிறர்சிநேகத்தொண்டு ஆதியனவற்றைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமெனப் பலநன்மதிகள்கூறி நல்லாசீர்அளித்தனர். சபையினர் மகிழ்ச்சிபொங்க நன்றிகூறிக் கரகோஷமுழக்கத்துடன் கலைந்தனர்

இச்சபையினர் நமதுஆலயத்திலும், வயோதிபர்தாபனத்திலும், ஆயித்தியமலை ஆலயத்திலும் காலைமாலைநடைபெற்றுவரும் பூசை, பாடற்பூசை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம், மாலையாராதனை, தேவநற்கருணைச்சந்திப்பு முதலியவற்றிலே மிக்கஆர்வத்துடன் முறைபிறழாது பங்குபற்றி ஒழுங்காகப் பணிபுரிந்துவருகின்றனர். இவர்கள் உரிய வேளைகளில் ஊதா, நீலம், சிகப்பு, பச்சை, கறுப்பு முதலாம் நிறஉடைகளில் காட்சியளித்துப் பலிபீடசேவை புரிய வழிவகுத்துவரும் கட்டளைக்குரவருக்கும, தங்கள்பணியை ஆர்வத்துடன் புரிந்துவரும் சபைச்சிறுர்க்கும் பங்கினர்சார்பில் நன்றிகூறி, இச்சபையில் தேவஅழைத்தல் பெருகும்படி நமது யாத்திரைக்கன்னிமரியாயைத் தினமும்வேண்டுகின்றோம்.

### கிளென்னிஆண்கள் உயர்தரபாடசாலை

சென்ற 20-6-59 சனிவாரம் மட்டக்களப்புவட்டாரப் பாடசாலைகளுக்கென நடாத்தப்பெற்ற விளையாட்டுப்போட்டியில் நமதுகிளென்னி ஆண்கள்பாடசாலை தேகப்பயிற்சிப்பகுதியில் 2-வது இடத்தையும், விளையாட்டுப்போட்டியில் பத்துக்குமேற்பட்ட பரிசில்களையும்பெற்று முன்னொருபோதும் பெற்றிராதபெருமையை அடைந்தது. இப்பாடசாலையில் கல்வி, விளையாட்டுஎன்பன மேன்மேலும் வளர்ச்சியடைந்து எம்பதிக்குப்பெருமையை அளிக்குமாறு இத்தருணம் மிக்கமனமகிழ்வுடன் உற்சாகமூட்டுகின்றோம்

---

● இந்தியாவிலே முஸ்லீம்கள், சீக்கியர், கிறீஸ்தவர்கள், பார்ஸிகள், ஷெடூல்ட் வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஜனநாயக சமஷ்டிக்கட்சிஒன்று அமைக்கப்படவிருப்பதாய் மைசூர் இராச்சிய சபை அங்கத்தவரான திரு. பி. ஷாம் சுந்தர் அறிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



**அருமைச் சகோதரங்களே!**

பணம் இல்லாமல் பல விலைஉயர்ந்த போகப்பொருட்களை வாங்க முடிவதில்லை. அவைகளால் வரும் இன்பத்தையும் அனுபவிக்க முடியாது. இத்தகைய நிலையில் உதவச் சிலவங்கிகள் முன்வருகின்றன.

5,000 ரூபா, அல்லது 10,000 ரூபா இருந்தால் என்னென்ன வாங்கலாம், அனுபவிக்கலாம்! என யோசித்துப்பாருங்கள். நீங்கள் ஏன் அதை வாங்கவும் அனுபவிக்கவும் கூடாது? இதோ உங்களுக்கு இலகுவான வழியில் உதவிசெய்கிறோம் என்றெல்லாம் விளம்பரஞ் செய்கின்றன, அவ்வங்கிகள்.

ஒரு பத்தாயிரம் ரூபா உங்களிடமிருந்தால் என்ன செய்வீர்கள். அதை எப்படிச் செலவழிப்பீர்கள். சிந்தித்துப் பாருங்கள். அச்சிந்தனைகளைக் கோவைப்படுத்தி எழுதுங்கள்.

நீங்கள் எழுதியதை எமக்கு அனுப்பினால் திறமான கட்டுரை 'புனிதவீரர்" பக்கத்தில் இடம்பெறும். எங்கே! யார் முதல் அனுப்புவீர்கள்?

அண்ணா.

## ஆடிமாதம்

ஆடிமாதம் சூரியனின் வெப்பம் சிறிதுசிறிதாகத் தணியத் தொடங்கும்மாதம். அங்கும் இங்குமாக மழைத்துளிகள் விழுந்து வரண்டு கிடக்கும் பூமியைக் குளிரச் செய்யும் மாதம். "ஆடிமழை தேடிவிதை" என்றபடி, கமக்காரர் தங்கள் நிலத்தை உழுது பண்படுத்தி விதைத்துச் சுறுசுறுப்புடன் உழைக்கும்மாதம்.

இம்முறை ஆடித்திருநாளுக்கு எங்களை மடுவுக்கு அழைத்துக் கொண்டுபோகும்படி என்தகப்பனாரைக் கேட்டேன். அவர் என்னை நோக்கி, மருதமடுவில் ஆடிமாதம் 2-ந்திகதி கொண்டாடப்படும் திருநாள் என்ன என்று கேட்டார். அதற்குச் சரியானவிடை இறுக்காதபடியால் இம்முறை மடுவுக்கு எங்களை அழைத்துப்போக முடியாது என்று சொன்னார். மறுமுறையும் இப்படிச் சம்பவியாதபடி, அத்திருநாளைப் பற்றி அம்மாவிடம் வினவினேன். அவசொன்ன:

ஆடி 2-ந்திகதி தேவமாதா எலிசபேத் அம்மாளை மினவிய திருநாள் என்று. தேவமாதா கபிரியேல் என்னும் தேவதூதனால் மங்கள வாழ்த்துக் கூறப்பட்டுக் கர்ப்பம் தரித்தபின் ஸ்நாபக அருளப்பரின் தாயாரான எலிசபேத் அம்மாள் தேவமாதாவுக்கு நெருங்கினபந்து. எனினும் சரீரஉறவைப் பார்க்கிலும் ஆத்தும உறவே அவர்களுள் அதிகமாய் விளங்கியது. இப்பூவையர் இருவரும் ஒருவரை ஒருவர் சமீபகாலத்தில் சந்தியாது விட்டாலும், ஒருவரின் விசேஷம் மற்றவருக்கு மறைவாக இருக்கவில்லை. எலிசபேத் அம்மாள் நெடுங்காலம் பிள்ளைப்பாக்கியம் இன்றி மனம் வருந்தினாள். கடைசியாக முதிர்வயதில் கர்ப்பம் தரித்திருக்கிறாள் எனக்கபிரியேல் சம்மனசுமூலம் தேவமாதாவுக்குத் தெரியவந்தது. அப்போது அவ அன்பினால் ஏவப்பட்டு எலிசபேத் அம்மாளுக்கு உதவி செய்வதற்காக "அயின்கரீம்" என்னும் ஊரிலே அவள் வசித்திருந்த வீட்டை அடைந்து அவளைச் சந்தித்துச் சோபனங்கூறியபோது, "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டதாமே, ஆ! என் ஆண்டவரின் தாயார் என்னிடம் எழுந்தருளிவர நான் யாது தவம் புரிந்தேனோ?" எனஉரத்த சப்தமாக உரைத்து உபசரித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். அப்போது தான் தேவமாதா "என் ஆத்துமமானது ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகின்றது. என் இரட்சணியமாகிய சருவேசுரனிடத்தில் என்மனம் எழும்பி மகிழ்கின்றது........" என்று தொடங்கும் பத்துவாக்கியங்களால் கடவுளைப் புகழ்ந்து பாடினா. இச்சம்பவத்தையே இத்திருநாள் ஞாபகப்படுத்துகின்றது. இதிலிருந்து சற்சனர் சகவாசம் சாலச்சிறந்தது என்றும், சர்வேசுரன் சதாஸ்துதிக்குரியவர் என்றும், ஒருவரை ஒருவர் சந்திக்கையில் சருவேசுரனுக்குத் தோத்திரம்புரிதல் நல்லது என்றும் கற்றுக்கொள்ள வேண்டும் என அம்மா சொன்னா. மறுமுறை மடுத்திருநாள் வரும்போது தகப்பனார் மறுபடியும் அந்தக்கேள்வியை என்னிடம் கேட்டால் சரியானவிடை கொடுப்பேன். அப்போது அவர் எங்களை மடுவுக்கு அழைத்துக் கொண்டு போவாரா? இல்லையா?

S. A.

## நான் யார்?

கடலினிலே அலையெறிந்து
கலைநடனந் தந்தேன்
காட்டினிலே கழைபிளந்து
கானமழை தந்தேன்
உடலினிலே உணர்வுடனே
உயிர்நிலவத் தந்தேன்
உலகினிலே உருவமெலாம்
உலவிடச்சீர் தந்தேன்.

●

பூவினிலார் நறுமணத்தைப்
பூமிபெறத் தந்தேன்
புத்துணர்ச்சி மேனியிலே
போர்த்திடவுந் தந்தேன்
பாவினிசை வெள்ளமதைப்
பரவிடவுந் தந்தேன்
பாரினிலே தீபவொளி
பரிமளிக்கத் தந்தேன்.

●

காலமெலாம் அலைந்திடுவேன்
ககனமெலாஞ் செல்வேன்
கண்ணுறங்கா திரவுபகற்
கடமையெலாஞ் செய்வேன்
ஞாலமெலாம் படைத்தவன்போல்
நான்மறைந் திருப்பேன்
நன்மைவளந் தந்திடுமென்
நாமம் உரைப்பாயே.

## மரணக் கொடி

பன்னிரண்டாம் நூற்றுண்டு சிலுவை யுத்தம் செய்தனர் கிறீஸ்துவர்கள். ஜெருசலேம் திருஸ்தலத்தைக் காப்பாற்ற உயிரையே தந்தனர். எதிர்க்கட்சியினருக்குச் சலாதீன் என்பவர் தலைமைதாங்கிப் போர்புரிந்தார். சலாதீன் வீரதீரர். பெருந்தன்மையாளர். ஒழுக்கக் குன்று. பெருந்தியாகி. சில கிறிஸ்துவ தலைவர்களைக் காட்டிலும் இவர் வீரத்தன்மையாய் நடந்திருக்கிறார்.

சலாதீன் ஒருபெருவள்ளல். இவர் எவ்வளவுக்குத் தமது பொருளைத் தானதர்மமாக வாரியிறைத்திருந்தார் என்றால் சாகும்பொழுது இவரிடம் ஒருகாசுமில்லை. அட்டதாரித்திர கோலத்தையே இவர் விரும்பினார் என்பதை இவரது மரணக் கொடியே தெரிவித்தது.

சாகுந்தருவாயில் இருக்கின்றார் சலாதீன். தன் வீரக்கொடியைப் பிடித்திருந்த கொடிவீரனை அழைத்து: "என் ஜெயக்கொடியை யுத்தத்தின் போதெல்லாம் நீ தாங்கிச் சென்றிருக்கிறாய்; இனி நீ எனது மரணக்கொடியைத்தான் எடுத்துச்செல்ல வேண்டும்; இந்தக் கொடி ஒருகிழிந்ததுணியாக இருக்கட்டும்; ஓர் ஈட்டியின் நுனியில் அதைப் பறக்கவிடு; நகரெங்கும் அதை எடுத்துச் செல்; அப்படிச் செல்லுகிறபோது வீரமுழக்கஞ் செய்; "ஆசியமன்னன் சாகும் பொழுது இந்தத் துணியைத்தவிர வேறொன்றையும் கொண்டுபோகவில்லை" என்று.

மன்னன் இறந்துபட்டான். பிரேதத்தை ஆடம்பரமாக அடக்கஞ் செய்ய எடுத்துச்சென்றனர். கொடிவீரன் மரணக்கொடியை — கந்தல் துணியை ஈட்டிநுனியில் பறக்கவிட்டு, அரசன்சொன்ன பிரகாரம் பிரஸ்தாபித்தான். சனங்கள் அனைவரும் பிரமிப்பு அடையாமல் இருப்பார்களா?

## அம்மா நான் ஓர்......

வழமைபோல் குணசீலனும் அவன் தாய் அன்னமேரியும் தங்கள் இராப்போசனத்தை முடித்துவிட்டு முற்றத்தில் இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தனர். அன்று நிலாவெளிச்சத்தினால் இரா பகல்போல் தோற்றமளித்தது. ஆனால், குணசீலனோ ஒருபோதும் இல்லாதவிதமாய்த் துக்கத்தினால் வாடியமுகத்துடன் தோற்றமளித்தான். ஏதோ ஒரு காரியத்தைத் தன்மனதில் வைத்திருப்பதையும், அதை வெளியே சொல்லுவதற்குப் பயப்படுவதையும் அன்னமேரி அவன் முகத்தில் கண்டுகொண்டாள். வெகுநேரமாக நிசப்தம் அவ்விடத்தில் குடிகொண்டிருந்தது. அவ்நிசப்தத்தை ஓட்டிக்கலைப்பவள் போல் அன்னமேரி தன்னை மறந்தவளாய் "மகனே, இன்று என்ன நடந்தது? நான் ஏதாவது குறை செய்தேனா?" என்று இப்படியாகப் புலம்பினாள்.

குணசீலனுடைய உள்ளம் இதைக் கேட்டதும் சிந்தனைக்கடலில் குதித்தது. தனது தந்தை தனக்கு நாலு வயதுநிரம்பாதபாலகனாக இருக்கும் பொழுது இறந்துவிட்டார். அன்று தொடக்கம் இன்றுமட்டும் என் அம்மா என்னை வளர்க்கப்பட்டபாடு தான் எவ்வளவு? சென்றவாரம்தான் நான் S. S. C. பரீட்சையில் சித்தி அடைந்ததாக மறுமொழி வந்தது. அதைக் கண்ட அம்மா எவ்வளவு சந்தோஷமடைந்தாள். ஆனால், நான் இப்போ என்மனதில் இருப்பதை வெளியிட்டால் அவள் மனம் என்ன வேதனைப்படும். இப்படியாக அவன்மனம் புயலில் அகப்பட்ட மரம்போல் ஆடி அசைந்து கொண்டிருந்தது. இவ்விதமாக அவன் பலவற்றைச் சிந்தித்துக்கொண்டிருந்தான்ஒழிய வாய்திறக்கவில்லை.

அன்னமேரிக்கு இதைக் கண்ணுற்றதும் மிகவும் துக்கமாய் இருந்தது. மறுபடியும்அவள்: "மகனே, உனக்கு என்ன நடந்தது? சொல்! சொல்!" என்றாள். குணசீலன் அவள் வாய் மூடுமுதலே "அம்மா நான் ஓர்......" என்று சொல்லிவிட்டு அப்பால் சொல்ல இயலாதவனாய்த் தடுமாறினான். "மகனே! பயப்படாமல் சொல்." "அம்மா! நான் ஓர் குருவாக வரப் போகிறேன்." இதைக் கேட்டதும் அன்னமேரி குணசீலன் நினைத்திருந்ததற்கு மாறாக அவனைக் கட்டி முத்தமிட்டு: "மகனே! இதையே நான் உன்னிடம் எதிர்பார்த்திருந்தேன். தேவதாயிடம் கேட்டுவந்ததும் இதுவே" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

வருடங்கள் பல உருண்டோடின. அன்று எங்கள் பங்குக்கோவிலில் ஒருபோதும் இல்லாதவிதமாக மணிகள் எல்லாம் ஆர்ப்பரித்தன. நான் எனது ஆடைகளை மாற்றிக்கொண்டு கோவிலை நோக்கிச் சென்றேன். கோவில் மிகவும் அலங்காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பீடத்திற்கு அருகாமையில் உள்ள ஆசனத்தில் ஒரு தலைநரைத்த கிழவி ஒன்று இருந்து மிகவும் பயபத்தியுடன் செபம் பண்ணிக்கொண்டிருந்தாள். அன்று ஓர் புதிய குருவானவர் பூசை வைத்தார். பூசை முடிந்ததும் எல்லோரும் வெளியில் வந்து வரிசை வரிசையாக நின்றார்கள். சில பிள்ளைகள் பூமாலைகளுடன் யாரையோ எதிர்பார்ப்பதுபோல் தோற்றமளித்தார்கள். நடுவிலே பீடத்திற்கு அருகாமையில் இருந்த கிழவி நாற்காலியில் இருந்துகொண்டிருந்தாள். சொற்பநேரத்தில் புதிய குருவான

(அடுத்தபக்கம் பார்க்கவும்)

## நகைச்சுவை

ஆசிரியர்: சோமு, உனது றிப்போட்டை உன் தகப்பன் பார்த்துவிட்டு என்ன சொன்னார்?

சோமு: உக்கிரகோபத்துடன் என்னைப்பார்த்துக் கழுதையே! பிசாசிடம்போ என்றார்.

ஆசிரியர்: நீஎன்னசெய்தாய்?

சோமு: இதோ உங்களிடம் ஓடோடியும் வந்திருக்கிறேன் சேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா நான் ஓர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் வெளியில் வந்து நேரே அந்தக் கிழவியின் அருகே போனுர். இது எனக்குப் பெரிய அதிசயத்தைக் கொடுத்தது. அந்தக்கிழவி இந்தப் புதிய குருவானவரைக் கட்டி முத்த மிட்டாள். மாலைகள் இருவருடைய கழுத்தையும் மறைத்தன. அவர்கள் வேறு யாருமல்ல. சுவாமி குணசில னும் அவர் தாய் அன்னமேரியுமே யாகும்.

---

## புத்தளத்தில் மகா ஞானஒடுக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பாய் நடந்தேறின. குருமார்இரு வரும் தவறுகநடந்த எட்டுக்குடும்பங் களுக்கு அன்றுதினம் தேவதிரவிய அனுமானங்கள்மூலம் அவர்கள் கிறீஸ் தவவாழ்க்கைநடாத்த வழிசெய்தார் கள். சாயந்தரம் வண. குரூஸ்சுவாமி யவர்கள் "தேவதாயிடம் போங்கள்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு ஓர் பிரசங்கஞ்செய்து மாதாவைக் கண்டு பாவிக்குமாறு அனைவரையும் தூண்டி விடலானுர். அதன்மேல் அடைக் கலத்தாயின் திவ்விய அடைக்கலத் திலே நமதுகட்டளைக்குரவர்முதல் விசு வாசிகள்ஈருக இவ்விசாரணைப்பங்கில் அடங்கிய சகலரும் ஒப்படைக்கப் பெற்று ஞானஒடுக்கம் இனிதேநிறை வாயிற்று.

எவ். ரி. ரேச்.

---

## வவுனியாத் தபால்

வவுனியா, இறம்பைக்குளத்தில் கோயில்கொண்டிருக்கும் எமதுபாது காவலராம் அர்ச். அந்தோனியார்திரு நாள் சென்ற13-ந்திகதி சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப் படலா யிற்று. அதற்குஆயத்தமாகக் கொடி யேற்றத்துடன் நவதினஉற்சவங்கள் ஆரம்பமாகித் தினமும்காலை திவ்விய பூசையுடனும், மாலைசெபமாலை, பிரசங் கம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்து டனும் முடிவாகிவந்தன. திருநாளுக்கு முந்தியதினமாகிய 12-ந்திகதி வெள் ளிக்கிழமை தேவநற்கருணைத்திருநாள் பத்திச்சிறப்புடன் கொண்டாடப்பட் டது. மலர்மாலைகளாலும், மின்சார தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் தேசோமயமாய்க் காட்சியளித்துநின்ற தேவாலயத்தில் வவுனியா, இளமரு தங்குளம், சேமமடு, பெரியகோமரசங் குளம், இராசேந்திரங்குளம், பாவற் குளம், பாத்திமாகிரி, பறநட்டகல் ஆதியாமிடங்களிலிருந்து பக்தர்கள் வந்து ஒருங்குகூடப் பிற்பகல்4மணியள வில் வண. கட்டளைக்குரவரால் தேவ நற்கருணை எழுந்தேற்றம்செய்து வைக் கப்பட்டுத் திருமணித்தியாலம் நடை பெறலாயிற்று.

பின்னர் பள்ளிச்சிறுர்களும், பக்திக் கூட்டங்களைச் சேர்ந்தோரும் செபஞ் செய்து முன்செல்ல, பாடகர்குழாம், பரிசாரகர்கூட்டம் அணிவகுத்துவர, வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம்சுவாமி யவர்களும், வண. சி. எஸ். நவரத்தினம் சுவாமியவர்களும் துணைபுரிய வண. கட்டளைக்குரவர் தேவநற்கருணைக் கதிர்ப்பாத்திரத்தைக் கரத்தேந்தச் சுற் றுப்பிரகாரம் ஆரம்பமானது. தேவாதி தேவனை எங்கள்திருமீட்பர் செடி கொடிகளாலும், மகரதோரணங்களா லும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதி யூடே எழுந்தருளியசமயம் வானுலக சம்மனசுகள்போன்று உடையணிந் திருந்த பன்னிருபள்ளிச்சிறுமிகள் புஷ்பாஞ்சலிசெய்து வழிசென்றகாட்சி யாவர்மனதையும் பரவசப்படுத்தியது. மூறையே மாதாவின்கூட்டத்தைச் சேர்ந்த மாதர்களாலும், கத்தோலிக்க வாலிபர்சங்க ஆடவர்களாலும் அழகுற அமைக்கப்பட்ட சிங்காரப் பந்தர்களில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப் படலாயிற்று.

ஈற்றில் கோயில்முன்றிலில் உள்ள லூர்துகெபியில் பாடசாலைமாணவர்க ளாலும், ஆசிரியர்களாலும் மலர்கள், மின்சாரவெளிச்சங்கள்கொண்டு அலங் கரிக்கப்பட்டிருந்த சிங்காசனத்தில் நற் கருணைநாதரை எழுந்தருளச்செய்து தெதேயும்என்ற தேவதோத்திரக்கீதம் பாடப்பட்டுத் தேவநற்கருணைஆசீர்வா தம் அருளப்பட்டது. தேவநற்கருணை யில் எங்கள்தேவன் மெய்யாகவேஇருக் கிறுர் என்றஉண்மையை அறிவற்றமிரு கங்களைக்கொண்டு எண்பித்தவரான அர்ச். அந்தோனியார் திருநாளுக்கு முந்தியநாள் தேவநற்கருணைத் திரு நாள் கொண்டாடப்பட்டது மிகவும் பொருத்தமானதே.

13-ந்திகதியன்றுகாலை 6-30மணிக்கு வண. கட்டளைக்குரவரால் திருநாட் பாடற்பூசை நிறைவேற்றித் தேவநற் கருணைஆசீர்வாதம் அருளப்பட்டதும் கோடியற்புதரின் திருசுரூபம் சுற்றுப் பிரகாரமாகக் கொண்டுசெல்லப்பட் டது. பின்னர், அன்றுமாலை 7மணியள வில் சம்பிரமமாகநடந்தேறிய விருந்து டன்திருநாள்இனிதே நிறைவேறியது.

ஜே. எஸ்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2024**

அராலி தெற்கு
தற்காலம் வட்டுக்கோட்டை
திருச்சிற்றம்பலம் இராசசுந்தரம்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு
1. முகமதுமீராசாகிப்ரேகு அலவுதீன்
2. பெண் முகமது பாத்துமாநாச்சியா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2024-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின் னுல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1959-ம்ஆண்டு ஆவணிமாதம் (1-8-59) சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத் தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,260-ம், இன்னும் ரூபா 6,000க்கு 1958 தைமாதம் 27-ந்திகதி தொடக்கம், 10-7-58வரையும், 100-க்கு 12வீதவட்டி யும் பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரையும், 100-க்கு 5வீதவட்டியும் கோட் டுச்செலவு ரூபா 316 சதம் 30.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற் கிறை புளியடியும், பண்ணவெளியும் நி. ப. $2\frac{7}{8}$, வீடு, கிணறு, செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—செய்லியாப்பிள்ளை மரைக்காயர் சேகுமுகம்மதுவின் காணி. வடக்கு — ஒழுங்கையும், சேகுமுகம்மது பெண்சுல்தான் முகிதீன்நாச்சியாவின் காணி. மேற்கு — முகமதுமுகிதீன் பெண் முகமதுகுலம்மா. தெற்கு—ரோட். இத டங்களில் சொரியலில் அரைவாசியும்.

தா. செல்லையா,
கோமிஷனரும், விலமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 30-6-59.

---

அச்சுவேலி, திரு. யோண் இராசாவின் புத்திரனுகிய பயஸ் காராளசிங்கமாகிய எனக்கும், சங்கானை, பெரியபிளாக்வீடு, பிளான்சாட் ஜெயராணியாகிய எனது மனைவியர்க்கும் விவாகமாகி இற்றைக்கு 21வருடங்களுக்குப்பின் எல்லாம்வல்ல இறைவன் இன்னருளால் சென்ற ஆனி 26-ந்திகதி ஓர் ஆண்மகவுபிறந்தது. வரு கிற ஆடிமாதம் 5-ந்திகதி குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்க நிச்சயித்துள் ளோம். எமது குடும்பத்தின்மேல் தேவ அருள் மென்மேலும் பெருக, நன்மன துள்ள கிறீஸ்தவ பெருமக்களின் ஞானப் பூச்செண்டை வரவேற்கின்ருேம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2526**

காரைநகர், களபூமி
குமாரவேலு கந்தையா — வழக்காளி.

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு
துரையப்பா நடராசா தன்கோதாவிலும் காலஞ்சென்ற தனதுமனைவி இராசமணி யின் உரிமைத் தத்துவகாரனுகவும்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2526-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின் னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி யை1959-ம்ஆண்டுஆவணிமாதம்1-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக் கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,240-உம், 30-10-58 தொடக்கம், 4-3-59வரைக்கும் ரூபா 2,000-த்துக்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டி யும், கோட்டுச்செலவு 320ரூபா 32சத மும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார் பண்ணை வடமேற்குஇறை ,'வெள்ளுரிவை யடியும், பெரும்வராயன்பிள்ளைப்புலமும், உன்தட்டான் மயிலன்வளவும்'' பரப்பு நில. இலா. 4. இந்த நான்குபரப்பும் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் $D\frac{1}{2}\frac{1}{7}\frac{2}{2}$இலக்கத்தில் பதிவுசெய்யப்பட் டுள்ளது. மேற்படி பர. நில. இலா. 4 யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் $D\frac{1}{2}\frac{1}{7}\frac{2}{1}$இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள் ளது. இவ்விரண்டுதுண்டும் சேர்ந்து பர. நில. இலா. 8-உம், பழையபனைமரங் களும், தென்னைமரங்களும், அதைச் சேர்ந்தவைகளும், செய்பயிர், வான்பயிர் களும். எல்லை: கிழக்கு— வறளிஅம்மன் கோவில் ஒழுங்கை. வடக்கு — நாகலிங் கம் பெண் சின்னத்தங்கச்சிக்கும், கதிர வேலு கைம்பெண் தங்கம்மாவிற்கும், செல்லப்பன் கைம்பெண் வள்ளிக்குமுரிய ஆதனங்கள். மேற்கு— சின்னப்பொடி தம்பிப்பிள்ளைக்கும், நமசிவாயம் கைம் பெண் சின்னத்தங்கத்துக்கும் உரியஆத னங்கள். தெற்கு—ஒழுங்கைஇதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.

---

## நன்றியறிந்த தோத்திரம்

திவ்விய சற்பிரசாதநாதருடைய இரக் கத்தினுலும், இருதயராசாவின் தயவி னுலும் பரிசுத்த கொஞ்சேஞ்சித்தாய் (புதுமைமாதா) இவர்களின் மன்ருட்டின லும் என் புருஷனுடையநோய் குணமா கியது. இதை நேர்த்தியின்படி பிரசித் தப்படுத்துகிறேன். என்றும்மென்மேலும் அவரைக் காத்தருளும்படி மன்ருடுகி றேன்.

S. M. J.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயநாதரிடமும், பரிசுத்தசதாசகாயமாதாவிடமும் நாங் கள் கேட்டுவந்த மன்ருட்டுக் கிடைக்கப் பெற்ருேம். இதை நேர்த்திப்படி பத்திரி கையில் பிரசுரம் செய்கிருேம். இன்னும், எங்களுக்கு வேண்டிய இகபரநன்மைக ளைத் தந்து ஆசீர்வதிக்கும்படி அவர்களை மன்ருடுகிருேம். அவர்களின் நாமம் எங் கும் புகழப்படுவதாக.

தேவதாயின் அடியார்கள்,
நாரந்தனை.

---

● இத்தாலியதேசத்தை மரியா யின்மாசற்றஇருதயத்திற்கு நேர்ந்து ஒப்புக்கொடுப்பதற்கு ஓர்முன்னுயத்த மாய் லிஸ்பன்நகரிலிருந்து அன்று சனிக்கிழமை பாத்திமா மாதாவின் திருச்சுரூபம் ஒன்று சிறிய ஹெலிக் கொப்றர் விமானம்ஒன்றில் கொண்டு வந்து நேப்பிள்ஸ்நகரில் இறக்கப்படலா யிற்று. இந்தச்சுரூபம் தற்போது 92 இத்தாலிய நகர்கள், பட்டினங்க ளுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப் பட்டுவருகிறது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2230**

கோப்பாய் வடக்கு
அம்பலவாணர் சண்முகம்
— வழக்காளி.

எதிராக

கோப்பாய் வடக்கு
1. சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும்,
2. பெண் செல்லாச்சியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2230-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின் னுல் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணி களை 1959-ம்ஆண்டு ஆவணிமாதம் 1-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,300-ம், 21-5-58 தொடக்கம், 15-9-58 வரைக்கும் ரூபா 1,000-த்துக்குப் 10வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக் கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 96ரூபா 85சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ் திறிக் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் வடக்கு கோயிற்பற்று, கோப்பாய் இறை "பளமனவுடை" நிலப்பரப்பு 1-ம் இக்காணியில் வடகிழக்கு எல்லையில்இருக் கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கு— சின்னப்பு தம்பையாவின் ஆத னம். வடக்கு— சின்னத்தம்பி கதிர வேலுவின் ஆதனம். மேற்கு— ஒழுங் கை. தெற்கு— சின்னக்குட்டியார் வயிர முத்துவின் ஆதனம்.

2. ஷெஇறை "பெரியவெளி தென் கிழக்கு தலைமடை" நெற்பரப்பு 16 (பதி னறு). எல்லை: கிழக்கு— முடிக்குரிய நிலம். வடக்கு— தில்லையம்பலம் சின் னத்தம்பிக்கும், சகோதரர்களுக்கும் உரிய ஆதனம். மேற்கு — சீனியர் கந்தையா வுக்குரிய ஆதனம். தெற்கு— நாகமணி கந்தர் இளையதம்பிக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{8}$பங்கு. அதாவது நெற் பரப்பு 6 (ஆறு) அதற்குரியவைகளும்.

3. ஷெஇறை "விரியத்தனை" நிலப் பரப்பு ஒன்றும், அதற்குரியவைகளும். எல்லை: கிழக்கு— காலஞ்சென்றுபோன செல்லத்துரை பெண் பொன்னுவின் உரி மைக்காரருக்குரிய ஆதனம். வடக்கு— ஒழுங்கை. மேற்கு — முருகேசு இளைய தம்பிக்குரிய ஆதனம். தெற்கு— கதிர வேலு பெண் ஆச்சிப்பிள்ளைக்குரிய ஆத னம்.

4. ஷெஇறை "ஆராச்சிவயல்" நெற் பரப்பு $23\frac{7}{9}$. எல்லை: கிழக்கு— ஆறு முகம் நாகமுத்துவிற்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — காசிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு— பூதத்தம்பி சின்னப்புவுக்குரிய ஆதனம். தெற்கு— கதிரவேலு பெண் சிவக்கொழுந்துவுக்கும், மறுபேருக்கும் உரியஆதனம்.

5. ஷெஇறை "ஆவரம்பிட்டி" நெற் பரப்பு $3\frac{3}{4}$-உம், இக்காணியில்இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும். எல்லை: கிழக்கு— காலஞ்சென்ற அம்பலவாணர் பெண் வள்ளியம்மைப்பிள்ளையின் உரி மைக்காரரின் ஆதனம். வடக்கு— சின் னெட்டியார் கணபதிப்பிள்ளைக்கும் பெண் முத்தாச்சனுக்கும் சொந்தமாகிய இக் காணியில் எஞ்சியபாகம். மேற்கு— குள மும், செல்வவிநாயகபிள்ளையார் கோவி லுக்குரிய ஆதனமும். தெற்கு— மேற் படி பிள்ளையார்கோவில் ஆதனம்.

மேற்கூறிய ஆதனங்கள் முழுவதும் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் K 31—35/148 வரைக்கும் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 2-1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org